1329

# சிந்தனை



3L
ஊ211, N35CN
N126.29
157123

டம்பர். 1936. [மணி 9.

9 பை. மலாய்நாடு

# உள்ளுரை.


| நெ. | | பக்கம். |
|---|---|---|
| 1. | திருச்சி உலாழல் ... | 409 |
| 2. | பொன் மொழிகள் ... | 412 |
| 3. | எப். ஏ. கொலையாளி ... | 413 |
| 4. | படிப்பும் பகுத்தறிவும் ... | 417 |
| 5. | மாதிரி ... | 421 |
| 6. | அந்த இராத்திரி ... | 425 |
| 7. | மனைப் பொருத்தம் ... | 430 |
| 8. | குணவாகடம் ... | 433 |
| 9. | காமாலை ... | 437 |
| 10. | மருந்து செய் பகுதி ... | 439 |
| 11. | வேதவியாசர் முதற்காண்டம் | 440 |
| 12. | இனிமாப் பகுதி ... | 442 |
| 13. | நாகானந்தன் ... | 445 |
| 14. | மதிப்புரை ... | 452 |
| 15. | வைத்திய உலகில் புதுமை ... | 455 |


## சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு உள் நாடு | ... | ரூ 0—8—0 |
| ,, வெளி நாடு | ... | ரூ 1—0—0 |
| தனிப்பிரதி | ... | ரூ 0—0—9 |
| ஜீவிய சந்தா | .... | ரூ. 10—0—0 |

புதிதாய்ச் சேருகிற சந்தாதாரர்களுக்கு அவர்கள் பணம் அனுப்பி சந்தாதாரராய்ச் சேருகிற மாதத்திலிருந்து ஒரு வருஷத்திற்கு பத்திரிகை அனுப்பப்படும். சந்தாவை மணியார்டரில் அல்லது ஸ்டாம்பாக அனுப்பவேண்டும் வெளி நாட்டினர் இம்பீரியல் கூப்பனாகவும் போஸ்டல் ஆர்டராகவும் அனுப்பலாம். வி.பி. அனுப்பினால் 6 அணா அதிக செலவாகும்.

## விளம்பர விகிதம்.

| | |
|---|---|
| ஒரு தடவைக்கு முழுப்பக்கம் | ரூ. 5—0—0. |
| ,, அரைப்பக்கம் | ,, 3—0—0. |
| ,, கால்பக்கம் | ,, 1—8—0. |

மானேஜர், "சித்தன்", பழனி. S. I.

---

"சித்தனில்" வெளிவரும் பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்களே. அவை யாரையும் குறிப்பிடுவனவல்ல.

## அறிவிப்பு.

நமது "சித்தன்" பத்திரிகையை இதைவிடப் பெரிய சைஸில் அநேக சித்திரப் படங்களுடன் வெளியிட உத்தேசித்து இருப்பதால் இனிமேல் அதிக விஷயங்களை சந்தாதாரர்கள் அறிய வழி ஏற்படுவதோடு வியாபார உலகிற்கும் பெரிதும் பயன்படுமென்று நம்புகிறோம்.

மானேஜர், "சித்தன்" பழனி.

OF THE REGIS
16 SEP 19..
MADRAS


# "சித்தன்"

பழனி.

ஓர் உயரிய மாதப்பத்திரிகை.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்"

ஆசிரியர்:— C. P. சாமி.

| மாலை 2. | செப்டம்பர். 1936. | மணி 9. |
|---|---|---|


## திருச்சி ஊழல்.

திருச்சியில் நடைபெற்ற நகரசபைத் தலைவர் தேர்தல் சம்பவமும், அதன் பயனாய் ஸ்ரீ ராஜகோபாலாசாரியார் தமது காங்கிரஸ் பதவிகளை ராஜிநாமாச் செய்ததும், காங்கிரஸ் தலைவர்களிடையே பெருத்த அதிர்ச்சியை விளைவித்துவிட்டதுமல்லாமல் சிலநாட்களாக எங்கு பார்த்தாலும் அதேபேச்சாக இருந்துவருகிறது. இதென்ன அவ்வளவு பிரமாதமான விஷயமா எனக்கேட்கலாம். ஆம்.

திருச்சி, டாக்டர் ராஜன் தீவிர காங்கிரஸ் வாதியாக இருந்தும், காங்கிரஸ் கட்டளையை மதியாது நடந்துகொண்டது பெரிதும் விசனிக்கத்தக்க விஷயம் தான். டாக்டர் ராஜன் சிறந்த தேசபக்தராயும், தேசசேவையே தமது லக்ஷியமெனப் பறைசாற்றி, மகாத்மாவோடு தென்னாட்டுப் பிரயாணம் செய்த பெரியாரன்றோ! அவருக்கு மக்களிடை கட்டுப்பாடு அவசியமென்பது தெரியாமலிருக்குமா? அப்படி இருந்தும் அவர் அதினின்றும் பிறழ்ந்தது அவரின் தவறே ஆகும். அது மாத்திரமா? ஸ்ரீ ஆச்சாரியார், அவரை எவ்வளவோ கேட்டுக்கொண்டும் அதற்குச் செவிசாய்க்காது

இருந்தது மற்றொரு குற்றமாகும். ஸ்ரீ ஆச்சாரியார் என்ன சாமானிய மனிதரா? காங்கிரசின் தற்போதய உன்னத நிலைமைக்கு அவரொரு ஆல்பதம். அவரின் அரிய சேவையை யார்தான் போற்றாமல் இருக்கமுடியும்? தென்னாட்டு 'காந்தி' என மதிக்கப்படும் ஒரு பெரியாரின் வார்த்தையை, அதிலும் ஒப்பற்ற தியாக புருஷரின் சொல்லை, அதிலும் தேசிய மகா சபையாகிய காங்கிரசின் நலங்கருதி செய்யப்படும் காரியத்தைத் தவிர்ப்பது என்றால் யார்தான் டாக்டர் ராஜனின்மீது குறைகூறாமல் இருக்கக்கூடும்?

இந்நிலையில்தான் டாக்டர் ராஜனின்நடத்தையில் அதிருப்தியுற்று ஸ்ரீ ஆச்சாரியார் காங்கிரசிலிருந்து விலகியிருக்கிறதாகச்சொல்லுகிறார். தேசமக்களின் நலங்கருதி ஸ்ரீ ராஜாஜீ சற்றுப்பொறுமையுடன் இருந்திருந்தால்நலமாயிருக்குமென்றும், இவர் இப்படிச் செய்தது அவசரப்பட்ட செய்கையாகும் என்றும் அகில இந்தியத் தலைவர்கள் கருதுகின்றார்கள். ஒரு சிலரின் தவறுதலான நடத்தைக்காக அக்கக்ஷியையே விட்டு நீங்குவது நியாயமாகமாட்டாது என்பதை ஸ்ரீ ஆச்சாரியார் அறிவர். என்றாலும், அவர் ராஜீனாமாச் செய்ததற்கு வேறுகாரணமும் இருந்திருக்கவேண்டும் என்றுதான் இதிலிருந்து கருதவேண்டியிருக்கிறது.

தவிர காங்கிரஸ்காரர்கள் பொது ஸ்தாபனங்களைக் கைப்பற்றுவதென்று முடிவுசெய்துகொண்டு அதில் பிரவேசிக்கத்தலைப்பட்ட நாள்முதல் அவர்களுக்குள் அபிப்ராய பேதங்கள் ஏற்பட்டுத்தான் வருகின்றன. இதற்கு வேலூர் சம்பவமே போதுமானது. இம்மாதிரி ஏற்படுவதற்கெல்லாம் நாம் என்ன செய்வது? இன்னும் எத்தனையோ காரியங்கள் நிகழ்ந்தாலும் நிகழலாம். இதையெல்லாம் பொருட்படுத்திப் பயனில்லை. இதற்காக எவரும் மனத்தளர்ச்சியுறாமல் காங்கிரஸ் ஆணையை மீறுவோர்மீது தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டியதுதான். தவறுதல்ஏற்படுவது சகஜம். அதை அவ்வப்போது சீர்திருத்துவது பெரியார் செயல்; அல்லவா? இதுவே தேசாபிமானம்மிக்க தலைவர்களின் முக்கிய கடமையுமாகும்.

பம்பாய் காங்கிரஸ் காரியக் கமிட்டியார் ஸ்ரீ ஆச்சாரியாரைக் கமிட்டியிலிருந்து ராஜீனாமாச் செய்ததைப்பற்றிப்



புனராலோசனை செய்யுமாறுதெரிவித்தும் சம்மதியாதுகண்டு ராஜீனாமாவை வருத்தத்துடன் அங்கீகரித்தனர். டாக்டர் ராஜன் எவ்வளவோ நீளமான அறிக்கை வெளியிட்டுங்கூட காரியக்கமிட்டி தனது கண்டனத்தைத் தெரிவிக்காமல் சும்மா இருந்துவிடவில்லை. வேண்டுமென்றே உறுதிமொழியை மீறியதுடன், திருச்சி நகரசபையின் மற்ற காங்கிரஸ் அங்கத்தினர்களையும் உறுதிமொழியை மீறும்படி தூண்டிய டாக்டர் ராஜன் செய்கை, காரணமற்றதெனக் கண்டிக்கப்படவேண்டுமெனக் கமிட்டி தீர்மானித்துளது. இதை நாம் பாராட்டுகிறோம்.

காங்கிரசைப்போன்ற தன்னலமற்ற ஸ்தாபனங்களுக்கு லட்சியம் பெரிதேயொழிய தாட்சணியம் பெரிதல்ல என்பதைக்கமிட்டியார் காரியத்தில் காட்டியிருப்பதானது மிகவும் மதிப்பிடத்தக்க விஷயமாகும்.

189933

---

## தமிழ் வைத்திய சிகாமணிகாள்!

இப்பத்திரிகையானது வைத்திய முன்னேற்றங்கருதியே ஆரம்பத்தில் ஏற்படுத்தப்பட்டு, வைத்திய சம்பந்தமான பல அரிய விஷயங்களையும் வெளியிட்டுவருகிறதை அறிவீர்கள்; ஆனால் தமிழ் வைத்தியர்களாகிய உங்களின் ஆதரவு போதுமான அளவு இல்லாத காரணத்தால், பொதுஜன ஆதரவை எதிர்பார்க்க வேண்டி வருமே. அப்போது அதற்கேற்ப விஷயங்களையும் பிரசுரிக்க நேரிடின் வைத்திய சம்பந்தமான விஷயங்கள் அதிகம் காணப்படா. காலக்கிரமத்தில், அதுவும் இல்லாமல் போய்விடுமே என வருந்துகிறோம். ஆதலின், இனியாவது உங்கள் பூரண ஆதரவு வைத்து தமிழ் வைத்தியம் முன்னேற வழி தேடுவீர்களாக.

(ஆசிரியன்.)

---

### சந்தாதாரர்களே!

உங்கள் சந்தாவை அனுப்பிவிட்டீர்களா? இல்லையேல் தயவுசெய்து உடனே அனுப்புங்கள்.

## பொன் மொழிகள்

(T. M. R. வையாபுரி.)

'கடவுளை பூஜிக்க இச்சையுள்ளவர்கள் கடவுளின் மக்களைச் சேவிக்கத்தான் வேண்டும். ஆயின் முதலில் இவ்வுலகில் யாரைச் சேவிக்க வேண்டும்? கடவுளின் பக்தர்களைச் சேவிக்கிறவர்கள்தான் மகாபக்தர்களென்று கீதையில் சொல்லப்பட்டிருக்கிறதன்றோ! நீங்கள் கடவுளைத் தேடிச்செல்வது வேறெவ்விடத்திற்கு? தினம்காணப்படும் ஏழைகளும், பலஹீனர்களும், ரோகிகளும் கடவுளின் சொரூபமன்றோ!'

— ஸ்வாமி விவேகானந்தர்.

.... .... ....

'முகம்மதியர் ஜலத்தைப்பாணி என்றும், ஆங்கிலேயர் (water) வாடர் என்றும், இந்தியர் தண்ணீர் என்றும் கூறுகிறார்கள். எப்பெயரிட்டழைப்பினும் வஸ்து ஒன்றே. அதுபோல எம்மதத்தினர் எப்பெயரிட்டு அழைப்பினும் ஆண்டவன் ஒன்றே'.

— பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

### ஸ்ரீ ரங்கம்
### திராவிட வைத்தியமண்டல
### பிரதான காரியதரிசி
### கவனிப்பாரா?

சென்ற வருஷம் நடந்த மகாநாட்டிற்கு "சித்தன்" பத்திரிகையின் பாதிரிக்காப்பி ஒன்று அனுப்பிவைத்து அப்பத்திரிகையைப்பற்றி மகாநாட்டாரின் அபிப்பிராயம் தெரிவிக்குமாறும், அதனை ஆதரிக்குமாறும் கேட்டுக்கொண்டதற்கு பிரஸிடெண்டு அவர்கள் அவ்விஷயம் காரியக்கமிட்டிக் கூட்டத்தில் முடிவு செய்து அனுப்புவதாக எழுத்து மூலம் கொடுத்திருந்தும், நாளதுவரை எவ்வித ஏற்பாடும் செய்யவில்லை. ஆதலால இனி நடைபெறப்போகும் மகாநாட்டிலாவது இவ்விஷயம் எடுத்துக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

மானேஜர், "சித்தன்" பழனி.

## எப். ஏ. கொலையாளி.

(M. S. பாலசுப்பிரமணியம்.)

'அப்பா! மணிவாசகம்! நீ நமது நிலைமையை அறியமாட்டாயா? அப்படியிருக்க காலேஜ் படிப்பிற்குப் போக வேண்டுமென்கிறாயே. இது நம்மால் முடியக்கூடியதா? வேண்டாம் இந்த எண்ணத்தை விட்டுவிடு'.

'அப்பா! நமது நிலைமையில் இதுவரை கஷ்டப்பட்டு S.S.L.C. வரை படித்துவிட்டேன். இப்போது அதற்குமேல் படிக்காது நிறுத்துவது மிகத்தப்பிதம். ஆகையால் தாங்கள் கஷ்டத்துடன் கொஞ்சம் சிரமப்பட்டு பணம்சேர்த்து அனுப்புங்கள். நான் மதுரை சென்று வீண் செலவின்றி படித்து வருகிறேன். இதை மறுக்காதீர்கள். நான் இப்போதைய படிப்பால் மட்டும் என் செய்வது?'

'மகனே! நாங்கள் மானத்தை மறைப்பதற்குக் கந்தல் கூட இன்றிக் கஷ்டப்படும்போது உனக்கு மேல படிப்புக்கு எங்கிருந்து பணம் சேகரிக்க முடியும்? ஆகையால் நீ இதுவரை படித்ததுபோதும்; உத்தியோகம் செய்து எங்களுக்கு நன்மையைச் செய்'.

'இதுவெல்லாம் முடியாது. நீங்கள் பண உதவி செய்யாவிடில் நான் தற்கொலை செய்துகொள்வேன்' என்று கூறினான் மணிவாசகம். இவனது ஊர் வடுகபட்டி. இவன் தந்தை ஓர் ஏழை சமுசாரி. பிறர் நிலங்களைக் குத்தகைக்கு ஏற்று, உழுது பயிர் செய்து, குத்தகைபோக பாக்கியைக் கொண்டு குடும்பத்தை சிரமத்துடன் நடத்திவந்தனர். இந்நிலையில் தன் மகனை மேல் படிப்பிற்கனுப்ப என்ன செய்வார். பணம் கொடுக்காவிடில் மகன் இறந்துவிடுவான். என்ன செய்வது? எப்படியோ உருண்டு புரண்டு ரூபாய் முன்னூறை மூன்று வட்டிக்கு கடன்வாங்கி மகனை மேல் படிப்பிற்கு மதுரைமாநகருக்கனுப்பினர்.

பெற்றோர்கள் இம்மாதிரி கடனை வாங்கி தமது புதல்வர்களை பள்ளிக்கனுப்புவது அவர்களைக் கல்விமான்களாக்குவதற்கா? அல்லது உத்தியோகத்திற்கா? அப்படி உத்தியோகம் கிடைக்காவிடில் ஏமாற்றமடைந்து இன்னலுறுவதற்காகவா? நிற்க, கலாசாலை சென்ற மணிவாசகம் ஆறு மாதத்திற்கொருமுறை ரூபாய் முன்னூறு பெற்றுப்படித்து வந்தான். இண்டர்மீடியட் இரண்டாவது வருஷக்கடைசி. எப்.ஏ. பரீக்ஷைக்குப்பணம் கட்டவேண்டிய காலம் நெருங்கிவிட்டது. பணமனுப்பும்படி தந்தைக்கு மணிவாசகம் கடிதமெழுதினன். கடிதம் கிடைத்ததும் படிக்கத்தெரியாத அவனது தந்தை அக்கடிதத்தை எடுத்துக்கொண்டு அவ்வூர் [illegible]ஐயா என்பவரிடம் காண்பித்து விஷயம் தெரிந்து மிக்க மனக்கலக்கத்துடன் திரும்பினர். பின்னர் இரண்டு வாரம் கழித்து மணிவாசகத்தினிடமிருந்து பின் கண்ட தந்தி அவன் தந்தை காந்திமதிநாதத்திற்குக் கிடைத்தது. "உடனே பணம் அனுப்பவும். இல்லையேல் இதுவரை செலவழித்தது வீண்". தந்தியின் விஷயத்தைக் கேட்டறிந்த காந்திமதிநாதம் பைத்தியம் கொண்டவர்போல் வீடடைந்தார். 'பணம் வீணாய் விடுவதா? இவ்வளவு பணம் செலவழித்துப் படிக்கவைத்தது, பின்னர் இவன் சம்பாதித்துக் கடனைத் தீர்ப்பானென்று எண்ணத்தாலல்லவா? ஆனல் எண்ணியதற்கு மாறாக இப்படி நேர்ந்ததே! என் செய்வேன்? நாளை பணம் அனுப்பாவிடில் அவன் திரும்பி வந்துவிடுவானே. நான் அவனைப் படிக்கவைக்காது விவசாயத்தில் பழக்கிவிடாது மோசம்போனேனே! தற்போது பள்ளியில் பயிற்றுவிக்கும் பாடம் அவனது பிற்காலத்துக்கு எதுப்பிரயோசனமில்லை. இதனல் பணக்கஷ்டமும் குடும்பச் சீரழிவுந்தவிர வேறில்லை. இப்போது பணம் நூறு ரூபாய் வேண்டுமே! இதற்காகத் திருடுவதா? ...... திருடத்தான் வேண்டும். கடன் கேட்டால் ஒருவரும் கொடுக்கமாட்டார்கள். திருடுவதுதான் சிறந்த வழி' என்று முடிவு செய்து நித்திரை இன்றி அன்றிரவைக் கழித்தார்.

மறுநாள் காலையில் தன் நிலச்சொந்தக்காரரான குணசேகரர் வீட்டிற்குச்சென்று சில விஷயத்தைப்பற்றிப்பேசிக்கொண்டிருந்து திரும்பும்போது வாசலில் விளையாடிக்கொண்டிருந்த குணசேகரரது புத்திரியின் [illegible] அதற்



குத்தெரியாவண்ணம் காந்திமதிநாதம் அபகரித்துச் சென்றனர். அதை அப்படியே பார்சலில் தன் மகனுக்கு அனுப்பிவிட்டார். தன் குமாரன் பரீக்ஷையில் ஜெயம் பெற்று, உத்தியோகம் கிடைத்ததும் சம்பாதிக்கும் முதல் வரும்படியால் கல்லட்டிகையை வாங்கி குணசேகரரிடம் எப்படியாவது சேர்த்துவிடலாமென்று எண்ணினர். மகனும் பரீக்ஷைக்குப் பணம் கட்டியதாக கடிதம் எழுதியிருந்தான்.

'ஐயோ! முதல் சம்பளம் எதற்கெல்லாந்தான் உதவும். படிப்பிற்காக இதுவரை வாங்கிய கடனுக்காகுமா? கல்லட்டிகைக்கு ஈடுசெய்ய முடியுமா? குடும்பச் செலவிற்காகுமா? இவையெல்லாம் ஒருபுறமிருக்க, மணிவாசகத்திற்கு படித்ததும் உத்தியோகம் கிடைக்குமென்பது என்ன உறுதி? பரீக்ஷையில் ஜெயம்பெறுவான் என்பது என்ன நிச்சயம்? இவ்வளவு கற்ற மணிவாசகத்திற்கு ஆங்கிலத்தைச் சரிவரப் பேசப்படிக்கத் தெரியுமேதவிர வேறு ஏதாவது தெரியுமா? படித்துவிட்டோம் என்ற இறுமாப்பால் வேறு வேலை செய்வது இழிவென்று கருதி சும்மா இருக்கின்றனர். இத்தகைய கல்விக்காகக் கடன் வாங்கிப் படிப்பதைவிட எழுதப் படிக்கத் தெரிந்ததும் ஏதாவது துறையில் நுழைவது நன்மையைப்பயக்கும். தற்காலக் கல்வி உத்தியோக வேட்டைக்காகவே தவிர புத்திமானுக வேண்டுமென்பதற்கில்லை'.

குணசேகரர் தமது கல்லட்டிகை தவறிய விபரத்தைப் போலீஸ் இலாகாவிற்கு அறிவித்தார். மதுரை ஜில்லாவின் எல்லா தாலூகாவிலுமுள்ள ஷாப்வியாபாரிகளுக்கும், அடகு சாமான்வாங்குபவர்கட்கும் இவ்விஷயம் தெரிவிக்கப்பட்டது. இதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே மணிவாசகம் கல்லட்டிகையை ஓர் செட்டி கடையில் அடகுவைத்துப் பணம்பெற்று பரீக்ஷைக்குப் பணம் கட்டினன். இந்த அறிக்கையைக்கண்டதும் செட்டியார் தன்னிடம் அட்டிகை அடகுவைக்கப்பட்டிருப்பதாயும், வைத்தவர் முழு விலாசத்தையும் தெரிவித்தான். மணிவாசகம் பரீக்ஷை எழுத உட்கார்ந்தான். போலீசார் மணிவாசகத்தை அணுகி விவரம் தெரிவிக்க மணிவாசகம் அட்டிகை தனதென்று ஒப்புக்கொண்டான். போலீசார் அவனைக்கைது செய்து குணசேகரருக்கு விபரம் தெரிவிக்

கப்பட்டது. குணசேகரர் மதுரை வந்தடைந்து குற்றவாளியைக்கண்டதும் அவன் ஒருபோதும் திருடி இருக்கமாட்டான் என்று கூறி தானே ஜாமீன் கொடுத்து அவனுடன் ஊர் வந்து சேர்ந்தார். தந்தையிடமிருந்து விஷயமறிந்த மணிவாசகம் ஆருத்துயரிலாழ்ந்தான்.

அன்றிரவு வடுகபட்டியில் செல்வவந்தரான தெய்வநாதன்பிள்ளையை அவரது தம்பியான திருநாவுக்கரசு கொலைசெய்துவிட்டு அவரிடமிருந்து மூன்று லக்ஷம் ரூபாயை அபகரித்துக்கொண்டான். முன்னர்கூறிய கந்தையாவும் தெய்வநாதன் பிள்ளையின் சகோதரன். கந்தையாவைக்காண மணிவாசகம் அன்றிரவு அவன் வீட்டிற்குள் நுழைந்தான். அங்கு நடைபெற்ற கோரக்காட்சியையும் கொலை செய்த திருநாவுக்கரசையும் நோக்கி 'நீ அபகரித்த சொத்தில் பாதி எனக்குக் கொடுக்காவிடில் உன்னை தண்டனையடையும்படி செய்வேன்' என்றதும் அவனும் சம்மதித்தான். பணம் பெற்றுக்கொண்டதும் மணிவாசகம் தன் தகப்பனார் யார் யாருக்குக் கடன் கொடுக்கவேண்டுமோ அவரவருக்கு இன்சூர் மூலம் அனுப்பக்கருதி கவரில் பணத்தை வைத்து சீல் செய்து கவரை அனுப்பும்படி கந்தையாவிடம் சேர்த்தான். ஒன்றுமே அறியாத கந்தையாவும் கவர்களை தபாலில் சேர்த்தான். பணம் பெற்றுக்கொண்டதற்குப் பிரதி உபகாரமாக தானே கொலைக்குற்றத்தை ஒப்புக்கொண்டான். தன் தகப்பனார் தன் படிப்புக்காக வாங்கிய கடனைத் தீர்ப்பதற்காகவே நிரபராதியான மணிவாசகம் இக்கொலைக்குற்றத்தை தானே செய்ததாக ஒப்புக்கொண்டான். குமாரன் தூக்கிவிடப்பட்டதை அறிந்த அவனது பெற்றோர்களும் பாழும் தற்கால ஆங்கிலக் கல்வியை சபித்து உயிர்விட்டனர்.

அந்தோ! இத்தகைய தற்கால ஆங்கிலக் கல்விக்காக நம் பாரததேசத்தில் ஓர் குடும்பமே அழிவுற்றது. வாசகர்களே! இனியாவது உங்கள் மக்களுக்குத் தற்காலக் கல்வியைப் போதிக்காது அவர்களது பிற்கால வாழ்விற்கு உபயோகப்படும்படியான முறையில் கல்வி பயிற்றுவிப்பீர்களாக.

## படிப்பும், பகுத்தறிவும்.

(மு. கா. அம்பலவாணன்.)

படிப்பும் பகுத்தறிவும் என்றது மூன்று சொற்களால் அமைந்த ஒருசொற்றொடர். படிப்பு என்பது வினையடியாகப்பிறந்த ஒரு பெயர்ச்சொல். படி, தெரி, வாசி என்பன ஒரு பொருள் கொடுக்கும் முன்னிலை ஏவல் வினை. படி என்பது படித்தான், தெரிந்தான், வாசித்தான், கற்றான் என இறந்தகாலத்தைக் காட்டும் வினை முற்றுத்தொடராகவும் வரும். இச்சொற்றொடர்கள் படிக்கின்றான் என நிகழ்காலத்தையும், படிப்பான் என எதிர்காலத்தையும் முறையே முக்காலத்தையும் உணர்த்தக் கூடியவைகளாகவும் வரும். படித்தானென்பது பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி என்ற நான்குறுப்புகளான்முடிந்த தெரிநிலை வினை முற்று. படிப்பும், பகுத்தறிவும் என்றதில் (படிப்பும்) என்பதைப் பகுபதமாக்கின் படி+ப்+ப்+உம் என்ற நான்கு உறுப்புக்கள் தோன்றும். படி—பகுதி, ப்—இடைநிலை, ப்—சந்தி, உம்—சாரியை. இந்நான்கனுறுப்பனுள் சந்தியால் வந்த பகரவொற்று உம் என்னும் சாரியை ஏற்று படிப்பும் பகுத்தறிவும் என உடனிகட்பொருளாய் வருவன. இவற்றின் பொது இலக்கணம் இங்ஙனம் பல நூற்களைப் படித்தறிதலான்மனிதன் விசேடித்த பகுத்தறிவு பெறுதல் கூடுமென்பது இக்கட்டுரையின் நோக்கம்.

ஒரு தேசமோ அல்லது சமூகமோ முன்னேற்றமடைய வேண்டியதிருப்பின் அந்நாட்டு மக்கள் போதிய கல்வி அபிவிருத்தி உடையவர்களாய் இருத்தல் வேண்டும். அங்ஙனமின்றேல் அந்நாடு முற்போக்குடைய நாடாயிருத்தல் முடியாது. இவற்றிற்கு எடுத்துக்காட்டாய் நம் கண்முன்னே தோன்றுவது மேலை நாடுகளாகிய தற்கால ஐரோப்பிய நாடுகளேயாம். இக்கல்வியின் உயர்பெருந்தன்மையை நம் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார்

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்றார்.

எவ்வாறெனின், உலகத்தில் வாழும் உயிர்ப்பிராணிகட்கு தலைசிறந்து விளங்கும் உறுப்புக்களினுட் கண்ணே முதன்மையுடையதென்பது தெளிவு. அஃதின்றேல், எத்தகைக்காரியமும் முடிவாய் நடைபெறாதென்பது நம் அநுபவ வாயிலாற்றெரிந்த உண்மை. இவ்வகைபற்றியே திருமறை ஆசிரியர் மக்கட்கூட்டத்தினர்க்கு பொருளாதார முறைமைக்குக் கணிதமும் அறிவியல் நூல்களை ஆராய்தற்கு அத்யாவஸ்யமென்பதை வற்புறுத்துவாராயினர். புறப்பொருள்களின் காட்சிக்கு கண் எப்படி முக்கியமோ, அதேபோல் மனிதன் அகப்பொருட்காட்சிக்கு கணித நூலும், இலக்கண நூலும் முக்கியமென்பதை கண்ணுக்கு உவமைகாட்டி வற்புறுத்துவாராயினர். நம் ஔவை மூதாட்டியும்

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்றார். ஆகவே மனிதவாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு கல்வியே பிரதானமென்பது இவற்றால் பெறப்படுகின்றன. இன்னும் கல்வியே பல்லாற்றானும் முற்போக்குக்கு வழி காட்டும் கருவி, கல்வியே நாட்டை உய்ப்பிக்கும் வித்து. கல்வியே நாட்டை நடுநிலைமைப்படுத்தும் தாரக. கல்வியுடைய முழுமகனைக் காவலனும் விரும்பும்; காவலனினும் கல்வியுடையோன் மேலென்பதைக் கவியரசன் அதிவீரராம பாண்டியனும், ஔவைமூதாட்டியும்முறையேகூறியிருத்தல் காண்க.

"அறிவுடையொருவனை அரசனும் விரும்பும்"

"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையோன் ........"

கல்வியுடையோன் காவலர்க்கும் அவையத்து அஞ்சாது அறிவுபுகட்டும் ஆண்மகனாவன். இவற்றைப் பழங்காலத்து சங்க நூற்களில் ஒன்றாகிய புறநானூற்றிலிருந்து ஒரு சிறு குறிப்பை எடுத்துக் காட்டுவோம். தண்டமிழ் நாட்டு முடியுடை வேந்தர் மூவரில் ஒருவராகிய குளமுற்றத் துஞ்சியகிள்ளிவளவனுக்கு அக்காலத்து சங்கப்புலவர்களில் ஒருவராகிய வெள்ளைக்குடி நாயனார் என்பவர் புரவலன் தம் குடிகளை எவ்வாறு காத்தல் வேண்டும், அரசன் ஆக்கமனைத்தும் யாருடைய வாழ்க்கையில் அடங்கி இருக்கின்றன, காவ



லனை எவ்வாற்றால் தம் குடிகள் பழிக்கக்கூடும், பகைவர் எவ்வாற்றால் சரணாகதியடைவர் என்பதைத் தம் தெள்ளிய தீம்பனுவற்கவிதை ஒன்றினுற்றிரப்பட அமைத்துக்காட்டி உள்ளார். அவை வருமாறு:—

"கண்பொர விளங்குநின் விண்பொருவியன்குடை
வெயில் மறைக்கொண்டன்றோ அன்றேவருந்திய
குடி மறைப்பதுவே கூர்வேல்வளவ
வருபடை தாங்கிப் போர்ப்புறத்தார்த்துப்
பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே
வாரி பொய்ப்பினும் வாரிகுன்றினும்
இயற்கையல்லன செயற்கையிற்றோன்றினும்
காவலர்ப் பழிக்கும் இக்கண்ணகல் ஞாலம்
அது நன்கறிந்தனையாயின் நீயும்
நொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது
பகடுபுரந்தரு நர்பாரமோம்பிக்
குடிபுரந்தருகுவையாயின்
அடிபுரந்தருகுவர் அடங்காதோரே"

ன்ற இவ்வருட்பெரும் பாசுரத்தால் நம் புலவர்பெருமான் யத்தகு நீதிகளை அரசனுக்கு எடுத்துக்காட்டா நிற்கிறார். 'எம் அரும் பெரும் அரசரேறே!

எம்மனோர்க்கு கண்ணுக்கு இனிமை பயக்கும் பேரழ றடைய நும் வெண்கொற்றக்குடை ஆதித்தனின் கிரண வெம்மைக்காற்றாத நின் பெருங்குடிகளில் ஒருவர் பிடிக்கும் வெயில் மறைக்கும் குடையன்று; பின் எத்தகையது என் னின், நின் ஆட்சியின் கீழ் வருந்திய பிரஜைகளை ஆதரிக்கும் ல்லை அறிவுறுத்துதற்காயமைந்தவையன்றோ! மாற்ற ர் இடிபேறுகண்ட நாகம்போல் ஒடுங்கி ஓடுவதும், நும் ருேம் பெரும் ராணுவபலமும், நீ பற்பல போரின்கண் வற்றி கண்டதின் உயர்வும், நின் குடிமக்களின் செழுமை சர் கொழுழுனைவாய் வந்த செல்வமேயாம். மழையானது ன் நாட்டின்கண் மிதமிஞ்சிப் பெய்தாலும் அல்லது வரு யாது பொய்த்தாலும் இயற்கையேயுடைய தருமகாரி ங்கள் திரிந்து செயற்கையுடையனவாய்த் தோன்றினும் ன் நாட்டகத்தே நின்கண் வாழ்நர் நின்னைப் பழிப்பர்.

இந்நியதிகளை நீ நன்கு அறிகுவையாயின், கேவலம் குரளி பேசும் தீய குணத்தர்களின் புன்மொழி கேளாது பசுக்களை விருத்திசெய்து குற்றமற்ற பயிர்த்தொழில் புரியும் நின் குடிமக்களாகிய வேளாண்மக்களைக் காப்பாற்றுவையேயாயின் நின்மாட்டடங்காத வேற்றரசரும் காலக்கிரமத்தில் நின்னைச் சரணாகதியடைவர் என்பது திண்ணம் என்கின்றார்.

இப்புலவர் பெருமானார் ஏகசக்ராதிபதியாய் விளங்கும் அரசனுக்கும் காவலைநிதி நேர்ந்து அறிவுறுத்துதற்குத் துணிவுபூண்டது தாம் கற்ற கல்விப்பெருக்கதலைன்றோ! ஆகவே மனித சமூகத்திற்கு கல்வி மிக்க அவசியம். இக்கல்வியைத் தக்கார்பால் கற்றல்வேண்டுமென்பது தெளிவு.

(தொடரும்)


ஒவ்வொரு குடும்பத்திலும், ஒவ்வொரு வைத்திய சாலையிலும், ஒவ்வொரு புத்தக சாலையிலும் அவசியம் இருக்கவேண்டிய நூல்.

# சிகிச்சாசாரம்.

வைத்திய சம்பந்தமாயும், நோயற்றுவாழும் சீரிய முறையனைத்தும் சாங்கோபாங்கமாய் எடுத்தோதும் உயரிய சாஸ்திரம். ஒவ்வொருவரும் இந்நூலை அவசியம் வாங்கியேதீரவேண்டும்.

| குறைந்த விலை | அசல் விலை |
| --- | --- |
| ரூ. 3—8—0. | ரூ. 5—0—0. |
| தபாற் செலவில்லை. | தபாற் செலவு ரூ. 1¼. |

15—9—36 வரை

குறைந்த விலை திட்டதிற்குப் பணமனுப்பலாம்.

கிடைக்குமிடம்:—

டாக்டர் எஸ். ஏ. சின்னப்பர்,
"ஆவே மரியா காட்டேஜ்",
எட்டயாபுரம். (திருநெல்வேலி ஜில்லா)


# "மாதிரி"

(ஸ்கேலிடன்)

'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்று நம்மவர் அதிலும் நமது வீட்டில் அடிக்கடி சொல்லிக் கொள்வது சர்வசாதாரணமல்லவா? அதன் கருத்தைப்பாலர் முதல் விருத்தர் வரை யாவரும் நன்குணர்ந்திருப்பினும் ஈண்டு குறிப்பிடுதல் அனாவசியமன்று. தினந்தோறும் படிக்கணக்காகவும், மூட்டைக்கணக்காகவும் ஏககாலத்தில் ஏகபாத்திரத்தில் வேகும் சாதம் முழுமையும் நன்கு வெந்துளதாவென்று நோக்கும்பொருட்டு அதில் யாதாமோர் வெந்த அரிசி (பருக்கை)யை வெளியில் எடுத்து நசுக்கிப் பார்த்தாலே போதும். இதற்காக அவ்வளவு சாதத்தையும் பரீக்ஷைசெய்ய வேண்டுவதில்லை. இதற்குத்தான் மாதிரி பார்ப்பது என்று பெயர். வேண்டுமானால் உங்கள் அத்தைப் பாட்டிகளையும் கேட்டுக்கொள்ளுங்கள். இம்மாதிரியே எந்த மாபெரும் விஷயத்தையும் அதுசம்பந்தமான ஓர் சிறிய விஷயத்தைக்கொண்டு நிர்ணயிக்கலாம். மேலும் தகப்பன் மாதிரி மகனையும், தாயார் மாதிரி மகளையும் வெகு சகஜமாக காணலாம். எனவே பிரமாண்டமான சூரியனுக்கும் ஓர் துளி ஜலத்தில் காணப்படும் மிகமிகச்சிறிய சூரியனுக்கும் உள்ள தாரதம்மியமே மாதிரி என்பது.

இனி வியாபார உலகிற்கு வரவேண்டுமானால் 'மாதிரி'யின் பெருமை நன்கு விளங்கும். நமக்கு கண்கள் எவ்வளவு முக்கியமோ, வீட்டுக்கு ஜன்னல் எவ்வளவு முக்கியமோ, எங்கப்பாவுக்கு நான் எவ்வளவு முக்கியமோ, காங்கிரசுக்கு கதர் எவ்வளவு முக்கியமோ, பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஐ. சி. எஸ். வர்க்கம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவுதூரம் வியாபாரிகளுக்கு இந்த 'மாதிரி'யும் முக்கியமானது.

நிற்க, அறுவடையான தானியங்களைக் கொண்டுவந்து வீட்டில் குவித்துவிட்டு விலைபோகாமல் பெருமூச்சு விட்டுக்

கொண்டிருக்கும் ஏழைக் குடியானவனிடத்தில் ஓர் நெல் வியாபாரி சென்றால் உடனே என்ன கேட்கிறான்? 'எங்கே கொஞ்சம் நெல் கொண்டுவாருங்கள்; கொஞ்சம் மாதிரி பார்ப்போம்' என்று. இவ்விதமாக ஒவ்வொரு வியாபாரியும் சரக்கின் நயத்தைக் காணவேண்டி ஆரம்பத்தில் மாதிரி (sample) பார்ப்பது கண்கூடு. ஆனால் மாதிரிச்சரக்கைப் போல் விற்பனைச் சரக்கும் இருப்பதுண்டா என்பது வேறு விஷயம். நல்லது; நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் இனிய வாணாட்களில் எத்தனை எத்தனை விதமான வஸ்துக்களை மாதிரி பார்த்திருப்பீர்கள் என்பதைத் தயவுசெய்து இஷ்டத்தில் எனக்காக ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். என் சம்பந்தப்பட்டவரையில் நான் துள்ளித்திரிந்த காலையிலும், பள்ளி மாணவனாய் இருக்கும்போதும், தெரு முச்சந்தியில் கடைவைத்திருக்கும் கூனிப்பாட்டியிடம் சென்று காலணா நிலக்கடலை வியாபாரம் செய்வதற்குள் அரையணாவுக்கு மாதிரி பார்த்துவிடுவதுதான் வழக்கம். ஏன்? எங்கள் அத்தை காந்தாரியம்மாளின் வியாபாரத்தைத்தான் எடுத்துக்கொள்வோம். வீதியில் போகும் நாவற்பழம், மாம்பழம், கொய்யாப்பழம் முதலியன விற்கும் கூடைக்காரிகளை ஓயாது கூப்பிட்டு எல்லாவற்றையும் மாதிரி பார்க்காது போனால் அவளுக்கு வயிறு வெடித்துவிடுமோ என்னவோ? யார் கண்டது? முடிவில் இவள் வியாபாரமெல்லாம் 'மாதிரி' வியாபாரமே.

பின்னர் நவீன நாகரீக உலகின் பல்வேறுவிதமான வர்த்தகங்களையும் சற்று நோக்கிடில் அம்மம்ம! யாவும் மாதிரிகள்! யாவும் சாம்பிள்கள்! அடடா! என்னென்ன மாதிரி பிடிகள்! மாதிரி சோப்புகள்! மாதிரி செண்டுகள்! கடவுளுக்குத்தான் வெளிச்சம்' உண்மையில் மாதிரி என்றொன்றில்லாவிடில் வியாபார உலகமே ஸ்தம்பித்துவிடும்போலும். போதாக்குறைக்கு நேற்று நீங்கள் சினிமாவுக்குச் சென்று வந்தீர்களல்லவா? அதில் உமக்கும் உமது பரிவாரங்களுக்குமாக ரூபாய் 1-க்கு மேல் கைப்பிடித்துவிட்ட போதிலும் அடுத்த படத்தின் 'மாதிரி'யைப் பார்த்த பிறகு கட்டாயம் மறுபடியும் சினிமாவுக்குப் போய்த்தான் தீரவேண்டுமென்ற ஆவல் பிறந்துவிட்டதல்லவா? என்ன செய்வது? இன்னும் ரூபாய் 1-க்கு வழி தேடிக்கொள்ள வேண்டியதுதான்.



இவ்வளவும் எதனால்? அந்த மாட்சிமைதங்கிய 'மாதிரி'யால் என்பதை யாரே மறுக்க முடியும்?

சரி; அரசியலுக்குத்தான் வருவோமே. புதிய சீர்திருத்தங்கள், ஸ்தலசுயாட்சி, என்று சொல்லிக்கொள்ளுகிறார்களே அவற்றை என்னவென்று கருதுகிறீர்கள்? அதுவும் நமது சுதந்திர இந்தியாவின் மாதிரி (சாம்பிள்)தான். தவிரவும் நமது கனம் வைசிராய் "லின்லித்கோ" துரைமகனார்கூட ஏதோ பொலி காளைகள் என்று சொல்வதின் ரகசியத்தைப் பார்க்கும்போது விவசாய நாடாகிய நம் இந்தியாவிற்கு உயர்தரமான பசுக்களும், காளைகளும், மற்ற கால்நடைகளும் இன்றியமையாதவை என்றகாரணத்தாலேயே நல்ல 'மாதிரி' காளைகளைத் தாமே வாங்கிக் காட்டியிருப்பதோடு இந்திய சர்க்கார் மூலமாகவும் ஆதரவளிக்க முன்வந்துளார்.

இதைக் கேட்டமாத்திரத்தில் நீங்களும் மாதிரி காளைகளை வாங்கி விடவேண்டுமென்று நினைக்கிறீர்களல்லவா? என்னே 'மாதிரி'யின் மகிமை! இவ்விடத்தில் ஓர் சங்கதி; அதுவும் நல்ல மாதிரியாய்த்தான் இருக்கிறது. சுயராஜ்யமடைந்தபின் நாம் எவ்வளவு அழகாய் வாழப்போகிறோமென்பதற்கு மாதிரி (அடையாளம்) யாகவே திருச்சி முனிசிபல் தலைவர் தேர்தலும் சமீபத்தில் நடைபெற்றுளது. ஆதலால் 'மாதிரி' என்றால் இனியாவது உங்கள் வீட்டுக் கிள்ளுக்கீரை என்று எண்ணிவிடாதீர்கள்.

இப்போது இன்னும் சில மாதிரிகளைக் காட்டிவிட்டு நானும்விடைபெற்றுக்கொள்கிறேன். ஆனால் இந்த 'மாதிரி'களிடத்தில் உங்கள் கைவரிசைகளைக் காட்டமுடியாது. எப்படி எனில் உங்கள் ஊருக்குப் புதிதாய் மின்சார (எலக்ட்ரிக்) விளக்குகள் போட்டிருக்கிறார்களே அதன் கம்பிகள் ஒன்றைத்தொட்டு மின்சார சக்தியின் (current) 'மாதிரி'யைப்பார்க்க எண்ணினால் நான் என்ன செய்யமுடியும்? அதுபோலவே மரணம்என்பது எப்படி இருக்குமென்று 'மாதிரி' பார்க்க சர்ப்பத்தினிடமாவது, துப்பாக்கி முன்னாலாவது, காலரா, பிளேக் முதலியவற்றோடாவது பழக ஆரம்பித்துவிடாதீர்கள். மேலும், எனக்கு இன்னொரு சந்தேகம் பிறக்

கிறது. இவ்வளவு தூரம் நான் 'மாதிரி'யைப்பற்றிச் சொன்னதிலிருந்து உங்களுக்கு விவாகமாகாதிருந்து நீங்கள் மாமனார் வீடு சென்று, பெண்ணை 'மாதிரி' பார்க்கவேண்டுமென்று கேட்பீர்களோ என்னவோ? எப்படிச்சொல்ல முடியும்? அதெல்லாம் போகட்டும்: இம்மாதிரி உங்களுக்கு விஷய தானம் செய்துவரும் நமது "சித்தன்" உங்களுக்கு வருகிறதா என்ன? இல்லாவிடில் உடனே 'மாதிரி'ப்பிரதிக்கு எழுதுவீர்களா? எங்கே பார்ப்போம்?

தென் இந்தியா

மோட்டார் பாடசாலை.

(1916ளு ஸ்தாபிக்கப்பட்டது)

3மாதத்தில் மோட்டார் ஓட்டக் கற்றுக்கொள்ளலாம்.

மோட்டார் வண்டிகளை ஓட்டவும், மெஷின்களைக் கழற்றவும், பூட்டவும், எலக்டிரிக் வேலைகளையும், மலைப்பிரதேசங்களில் கார்களை ஓட்டவும், வேறு பல சீர்திருத்தங்களை செய்யவும், கற்றுக்கொடுத்து தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்டு லைசன்சும், பாடசாலை சர்ட்டிபிகேட்டும் கொடுக்கப்படும். வாசிப்பு இல்லாதவர்களுக்கும் சுலபமாய் கற்றுக்கொடுக்கப்படும்.

தேர்ச்சிபெற்றால் ரூ. 35 முதல் ரூ. 100 வரையிலும் பெறலாம். மோட்டார் மெக்கானிக் தமிழ் புத்தகம் 50 படம் 200 பக்கம் விலை ரூ. 2.

தபால் செலவு வேறு. விபரத்துக்கு எழுதவும்.

தென் இந்தியா மோட்டார் எஞ்ஜினீரிங் ஒர்க்ஸ் & பாடசாலை, மயிலாப்பூர் PO. சென்னை.

கீழ்கண்ட விலாசத்திலும் கிடைக்கும்:—

மானேஜர், "சித்தன்" காரியாலயம், பழனி.

# 'அந்த இராத்திரி'

(சிறு கதை.)

(நாகலிங்கம்.)

189933.

அம்மா நான் இன்று அவசியம் [illegible] புறப்படவேண்டும். ஆபீஸில் 4-நாட்களுக்குத்தான் லீவ் வாங்கியிருக்கிறேன்.

தாயார்:— ஒவ்வொரு மாதமும் லீவ் வாங்கிக்கொண்டு அயலூர் போவதும், பெண் பார்ப்பதுமாகவே இருக்கிறாய்—காரியம் ஒன்றும் முடிந்ததாய்க் காணோம். உன் மேலதிகாரிகள்தான் என்ன நினைப்பார்கள்?

மகன்:— அவர்கள் என்ன நினைத்தாலும் எனக்காக வேண்டியதென்ன? என் காரியத்தை நான் பார்க்கவேண்டாமா? இந்தத்தடவை எப்படியாவது காரியத்தை முடிக்காமல் வரமாட்டேன். பெண் யுவதியாம்; வயது சொற்பமாம்; படித்திருக்கிறதாம். இனி என்ன வேண்டும்?

தாயார்:— அப்படியானால் எப்போது திரும்பிவருவாய்?

மகன்:— நாளைமட்டும் அங்கிருந்து மறுதினம் திரும்பிவிடுகிறேன் என்று சொல்லிக்கொண்டே தன் கையிலிருந்த சிவகாசி கடிதத்தைப்படிப்பதும், மூடுவதுமாய் இருந்தான். பல தடவைகளில் பற்பல கடிதங்கள் அவனுக்கு வந்திருப்பினும், கடைசியாக வந்த இந்தக்கடிதம் அவனுக்குப் பலன் அளிக்குமென்று அவனை அறியாத ஏதோ ஓர் உணர்ச்சி தூண்டிக்கொண்டே இருந்தது.

... ... ...

ரிட்டையர்டு தாசில்தார் லேட் பவானிசிங்கின் ஏகபுதல்வன் பால்சிங். பவானிசிங்தன் வாழ்நாட்காலத்திலேயே தன் குமாரனைப் படிக்கவைத்தார். தன்னைப்போன்று தன் குமாரனும் ஓர் உயரியஉத்தியோகஸ்தனாய் விளங்கவேண்டுமென்

பது அவரது பேரவா. ஆனால் பால்சிங் மெட்ரிகுலேஷன் படிக்கும்போதே அவன் தந்தை இவ்வுலகவாழ்வை நீத்தார். இறக்குந்தருவாயில் சிறிது ஆஸ்தியை வைத்துச் சென்றார்.

பால்சிங் புஸ்தகப்பூச்சி. உலக ஞானம், பகுத்தறிவு, லௌகீக ஞானம் முதலியன மருந்துக்கும் பெற்றிலாதவன். ஆனால் பரீக்ஷையில் மட்டும் தவறாது வெற்றிபெற்று, மிக்க சிபார்சின்மேல் முன்சீப் கோர்ட்டில் குமாஸ்தா வேலை மட்டும்தான் அவனுக்குக் கிடைத்தது. விவாக வயதடைந்திருந்தபோதிலும் சுற்றத்தார் யாரும் பெண்கொடுக்க முன்வரவில்லை. கலியாண வயதும் கடந்துகொண்டேயிருந்தது. பால்சிங்கிற்கு ஒரு யுக்தி தோன்றியது. விளம்பரமூலம் பெண் சம்பாதித்து விடலாமென்பதே. அதிலும் எந்த ஜாதியிலும் பெண்கொள்ளலாம் என்ற முரட்டுத் தீர்மானமும் செய்துவிட்டான். பின்னர் கேட்கவாவேண்டும். எல்லா பத்திரிகைகளிலும் விளம்பரஞ்செய்தான். கடிதங்கள் தினசரி ஏராளமாய் வந்தன. அவற்றுள் சிலவற்றைப் பொறுக்கி பல ஊர்களுக்குச்சென்று பெண்களை நேரில் பார்த்தான். ஒன்றும் மனதிற்குப் பிடிக்கவில்லை. பெண்களிடத்தில் தானே நேரில் பேசி, பழகி, நேசித்து பின் விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்பது அவனது அவா. 10-க்கு 9 கேசில் அவன்எண்ணம் தோல்வியடைந்தது. அவனது மனக்கோட்டை தகர்ந்தது. மனமுடைந்தானெனினும், தன் முயற்சியில் தவறாது மாதாமாதம் பெண் பார்க்கப்போவதிலும், லீவு வாங்குவதிலும் தவறுவதேயில்லை. அப்படிக்கிடைத்த கடிதங்களில் ஒன்றுதான் முன்னே கூறப்பட்டது.

... ... ...

சிவகாசியில் பெண்ணின் தகப்பனார் ஒரு பிரபல கிறிஸ்தவ டாக்டர். பென்ஷன் பெறுபவர். அவரது ஒரே பெண் கல்விபயிற்றுவிக்கப்பெற்று செல்வமாய் வளர்க்கப்பட்டிருந்தனள். ஆனால், பரிதாபத்திற்குரிய-உரிமைகள்மறுக்கப்பட்ட-சுதந்திரம் இழந்த-சமூக இன்னல்களுக்குப் பலியான-நடைபிணங்களென ஒதுக்கித்தள்ளப்பட்ட "பாழும் விதவைகள்" இனத்தைச் சேர்ந்தவள்.

பால்சிங் பெண்ணைப் பார்க்கத்தான் முடிந்தது. வரப்போகும் மாமனாருடன் அளவளாவினான். எல்லாம் திருப்தி



தான்—ஆனால்—ஆனால் என்ன? உங்களுக்குத்தான் நான் சொல்லாமலே 'ஆனால்' என்பதின் அர்த்தம் தெரியுமே. பின் ஏன் முகத்தைச் சுளித்துக்கொண்டு ஆச்சரியத்தோடு நோக்குகிறீர்கள்? நீங்கள் எதை நினைக்கிறீர்களோ அதைத்தான்நானும்சொல்லப்போகிறேன். பால்சிங் ஒவ்வொருநிமிடமும் பெண்ணிடம் பேசவும், குணாதிசயங்களை அறியவும் ஆவல்கொண்டான். அவன் ஆவல் அதிகரிக்க அதிகரிக்க எண்ணம் கைகூடுவது தூர விலகியே நின்றது. தன் எண்ணத்தை பெண்ணின் தந்தையிடம்கூற கூசினான். ஒவ்வொரு நிமிஷமும் தான் எதையோ இழந்தவன்போல் ஏங்கலானான். "ஆ எனது எண்ணம் கைகூடாது; இத்தடவையும் கைகூடாதுபோய்விட்டால்"- என்பதை நினைக்குந்தோறும் பெருமூச்சுவிட்டான். பெண்ணை இழக்கப்பிரியமில்லை. தன் தாயிடம் கூறியமொழி பொய்த்துப் போகுமே. என் செய்வான்? இந்நிலையில் பொழுதும் சாய்ந்தது—இராப்போஜனம் முடிந்தது. பால்சிங்கின் எண்ணம் கைகூடினபாடில்லை. படுத்தவாறே பலபல எண்ணினான். அவனது மனம் நிம்மதியை இழந்தது. "நாளை புறப்படவேண்டும்; பேசாமலே போய்விடுவதா? அது முடியாது: பேசியே தீருவேன்" என்று தனக்குள் முடிவு செய்தான். ஏன் என் முகத்தைப்பார்த்து நகைக்கிறீர்கள், படுத்தபின், அந்த வம்பன் பால்சிங் செய்யும் முட்டாள் முடிவைக்கண்டு நகைக்கிறீர்கள்போலும். பொறுங்கள். அவன் அவசரத்தீர்மானம் அமுலுக்கு வருகிறதாவென்று பார்த்துவிட்டு நகையுங்கள்—அது என் குற்றமல்ல. சித்த சுவாதீனமற்ற பால்சிங் அந்நள்ளிரவில் அவ்வாறு முடிவு செய்துவிட்டான். நானென்ன செய்யமுடியும்?

... ... ...

காரிருள்; எங்கும் நிசப்தம். தூரத்தில் காரிருளைக் கண்டு வெகுண்ட நாய்களின் இரைச்சல் மட்டும் கேட்டது. அப்போது நடுநிசி. பால்சிங் படுக்கையைவிட்டெழுந்து சந்தடி செய்யாமல் பெண் துயிலும் அறையை நோக்கி நகர்ந்தான். கதவைத்திறந்து உள்ளே நுழைந்து பெண் துயிலும் இடத்தை உற்று நோக்கினான். ஆ! என்ன ஆச்சரியம்! அவன் கண்ட காட்சியை என்னென்பது? முதலில் அவன் தன் கண்களையே நம்பவில்லை. தான்வரிக்கப்போகும் பெண்

ஓர் கட்டிலில் அயர்ந்து நித்திரை புரிந்துகொண்டிருந்தாள், தனியாகவா என்று மட்டும் கேட்காதீர்கள். இல்லை என்றால் நீங்கள் ஆத்திரப்படாமலிருக்கமாட்டீர்கள். பக்கத்தில் முழுதும் போர்வையால் மூடி யாரோ படுத்திருப்பதாகத் தெரிந்தது. இக்காட்சியைக்கண்டதும் அவன் மனங்கலங்கியது, யோசிக்கும் சக்தியை இழந்தான், தான் காண்பது கனவா நினைவா என்றுகூட அவனுக்குத் தோன்றவில்லை. அடக்க முடியாத ஆத்திரமும் கோபமும் கொந்தளித்தெழுந்தது; மித மீறிய சினத்தால் நெஞ்சு படபடத்தது; கைகால்கள் துடிதுடித்தன. அந்த இடத்தில் நீங்கள் இருந்தால்........ தங்கள் பதில் எனக்குத் தேவையில்லை. பாவம், பால்சிங் உனக்காக இரங்குகிறேன்.

சந்தடி செய்தால் பெண்ணின் தந்தை விழித்துக்கொள்வாரென்றெண்ணி பால்சிங் சற்று நிதானித்து பெண்ணிடம் நெருங்கினான். 'நீ விவாகமாகாத விதவை—விபசாரி. இவ்வளவையும் அறிந்திருந்தும் உன் தந்தை என்னைப் படுகுழியில் தள்ளப்பார்த்தார்' என்று முணுமுணுத்துக்கொண்டே அவளது பாதத்தை தன் கால் கட்டைவிரலால் அழுத்தினான். அடுத்த விநாடி நிரபராதியான அப்பெண் சட்டென எழுந்து உற்றுப்பார்த்து யாரென அறிந்தாள்.

பெண்:— 'நீர் படித்தவரென்றீர்; அதன் பயன் இதுதானோ? நடுநிசியில், ஒரு அந்நிய பெண்ணிடம் — அதுவும் தனித்திருக்கும் ஒரு பெண்ணிடம் .... ....'

பால்சிங்:— 'போதும்; நிறுத்து; நான் நாளைக்குப் புறப்படுகிறேன். அதற்குள் உன்னிடம் சிறிது பேசவேண்டுமென்பது எனது பேரவா. அவ்வளவுதான்'.

பெண்:— கோபத்துடன் 'அதற்கு சமயமும் சந்தர்ப்பமும் இந்நள்ளிரவுதானோ? சென்றுவிடும்; என் தந்தை கண்டால் கோபிப்பார்' என்று அதிகாரத்தோடு கூறினாள்.

பால்சிங் எவ்வித பதிலும் கூறாது யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் அவ்விடம் விட்டகன்றனன்.

... .... ...

சுமார் ஒருவாரம் கழித்து பெண்ணின் தந்தைக்கு கடிதமொன்று வந்தது. அதில் பின்வருமாறு எழுதியிருந்தது.



ஐயா, 'ஒன்றுமறியாத என்னைப் படுகுழியில் தள்ளப் பார்த்தீர். நீர் உமது பெண்ணைப்பற்றி ஏதேதோ சொல்லிப் புகழ்ந்தீர். நானும் மெய்யென்று நம்பினேன். ஆனால் அன்றிரவு-அந்த துர்ப்பாக்யமான அன்றிரவு-மனதைக்குழப்பி, மதியை இழக்கச்செய்த அன்றிரவு-உலகக்கபடை அறியாத நான் உண்மைகண்ட அன்றிரவு உண்மையை அறிந்தேன். அந்தப்பெண்-'உமது அருமைக்குமாரி' ஒரு அயலானுடன் துயில்வதை நேரில் கண்டு மனம் வெந்தேன். அந்த நிமிடம் வீட்டை விட்டகன்றேன். இப்படிக்கு,

பால்சிங்.

ஆம்; இதைப்படிக்கும் பெண்ணின் தந்தையின் மனம் எவ்வாறிருக்கும்? உலகஞானமற்ற பால்சிங் செய்த முடிவைக் கண்டிக்கிறீர்களா? ஆமோதிக்கிறீர்களா? ஆனால் இப்போது உங்கள் முடிவு வேண்டாம். கீழே படியுங்கள்.

துடிதுடிப்பும், ஆத்திரமும் கொண்டு அவர் கடிதத்தை தன் மகளிடம் கொடுத்தார். முழுதும் படித்த அப்பெண் அன்றிரவு நடந்ததை முழுதும் கூறினாள். பின்னர் அவள் தந்தை உடனே (நமது நண்பர்) பால்சிங்குக்கு கீழ்க்கண்டவாறு கடிதம் எழுதினார்.

ஐயா, நீர் ஓர் பகுத்தறிவற்ற, படித்த முட்டாள் என்பதை உணர்ந்தேன். நீர் என் பெண்ணை என் சம்மதியில்லாது, நடுநிசியில், சந்தித்துப்பேச முயன்றது மன்னிக்க முடியாத பெருங்குற்றம். நான் ஏற்கனவே அப்பெண்ணுக்கு ஒருகுழந்தை இருக்கிறதென்று தெரிவித்திருந்தும், தூங்குகையில் தாயும் குழந்தையுந்தான் தூங்குவார்கள் என்ற அறிவற்று, அக்குழவியை ஓர் அன்னிய ஆடவனாகப் ரமித்தெழுதிய உம் அற்புதத்திக்கு நேரிலிருந்தால் தகுந்த ண்மானமளிப்பேன்; ஆனால் நல்ல வேளை - தொலை தூரம்.

---

அன்பரே! இப்போது உங்கள் முடிவு என்ன? ஏன் ன்னை ஏறிட்டு உற்றுப் பார்க்கிறீர்கள்? உங்களை ஏமாற்றி ிட்டேனென்று! இல்லை, இல்லை; உங்களைச் சோதித்தேன். யவுசெய்து உங்கள் முடிவைச் சொல்லுங்கள். இல்லையேல் மூதி அனுப்புங்கள் - நான் கேட்கும்போது.

# மாதர் பகுதி.

## மணப் பொருத்தம்.

(தோழர், A. B. ஆதித்தர்.)

காமமானது சிலகால் தானாகவும், சிலகால் காதல் கலந்ததாகவும் வெளிப்படுவது இயல்பு. இந்தக் காமத்தின் இயற்கைநெறி—வாழ்க்கையில் அதன் அமைப்பு ஆகியவைகளை நாம் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

தாயின் இரத்தம் பிள்ளைகள் தேகத்தில் ஓடிக்கொண்டேயிருக்கிறது. தந்தையின் இரத்தமும் இதில் சேர்ந்ததேயானாலும் பகுதிக்கு மேலாக நமது இரத்தம் தாயுடையதுதான். வயிற்றில் பத்து மாதமும், மடியில் பத்து மாதமும் நாம் தாயின் இரத்தம் பருகியே வளர்ந்தோம். அதனால்தான் பெரும்பாலும் சகோதர சகோதரிகள் ஒரேவித தன்மையும் குணமும் வாய்ந்தவர்களாயிருக்கிறார்கள். சகோதரத்துவம் காமத்தை எதிர்த்து நிற்பது. ஒரேவித தன்மையும், குணமும் அடைந்தவர்களுள் இயல்பாகவே காமம் கிளம்புவது இல்லை. காமப்பிரியத்தை அவர்களுக்குள் கலந்தால் அவர்களின் சகோதர அன்பு பிரிந்துவிடுமேயல்லாமல் வாழ்க்கையை இன்பமாக ஒத்து நடத்தப்போவதில்லை. இயற்கையை மீறி அநுபவிக்கும் எவ்வித சுகத்திலும் துன்பம் பிறக்குமேயல்லாமல் இன்பம் ஜனிப்பதில்லை. மேலும், ஒரேவித தன்மையுள்ளவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் புதிய விஷயங்களை ஆராயும் அறிவும், திறனும், சக்தியும் உடையவர்களாயிருக்கமாட்டார்கள்.

இதையறிந்துதான் நம்மவர்கள் சகோதர சகோதரிகளுக்குள் விவாக ஒப்பந்தத்தை விலக்கிவைத்தார்கள். தமிழர்கள் தவிர வேறெந்த நாட்டாரும் இந்த உயரிய நுட்பமான கொள்கையை ஆதிமுதல் கொண்டதில்லை.





பெற்றோரின் இரத்தமானது பிள்ளை, பேரன், பூட்டன், ஓட்டன், உறவறுத்தான் சந்ததிவரையும், ஒருக்கால் அதற்கு மேலும் சம்பந்தம்வைத்துக்கொண்டுதான் இருக்கிறது. இதனால்தான் நம்நாட்டில் பலதலைமுறைகள் வரையும் தங்களுக்குள் சம்பந்தங்கலக்காது; சிலகுடும்பங்கள் இரத்த சம்பந்தம் விட்டுப்போன பிறகும் கூட கட்டுப்பாட்டை மீற மாட்டாமல் சொக்கார உறவில் இருந்துவருகின்றன. ஆனால் அநேகமாக உறவறுத்தானோடு இரத்தசம்பந்தம் அறுக்கப்படுவதால் அதற்குமேல் சொக்காரர்களாயிருக்காமல் விவாக சம்பந்தம் செய்துகொள்வதில் குற்றமே இல்லை.

உறவறுத்தான் தலைமுறைக்குப்பிறகு விவாக சம்பந்தம் செய்துகொள்வதால் கெடுதியில்லை என்றபோதிலும், கலப்பு மணத்தால்தான் மனமொத்த வாழ்வுக்கும் அறிவு, ஆராய்ச்சிக்குரிய மக்கள் உற்பத்திக்கும் இடமுண்டாகுமென்று தெரியப்படுத்திக்கொள்கிறோம். ஏனெனில் கலப்புமணத்தில் பல்வேறுவிதமான இரத்தசம்பந்தங்களும், குணங்களுமமைவதினால்தான். அதன்மூலம் பல்வேறுவிதமான யுக்திகளும், உபாயங்களும் தோன்றக்கூடும். அவ்விதம் செய்யும் விவாகத்தையும் தன்மையறிந்துதான் நடத்தவேண்டும்.

காந்தமும், காந்தமும் ஒன்று சேராது. காந்தமும் இரும்புந்தான் ஒன்றுசேரும். அதுபோல் ஒரேவித தன்மையுள்ள தம்பதிகள் மனமொத்துவாழ்வதில்லை. ஆண்தன்மையுள்ள பெண்ணும், ஆண்தன்மையுள்ள ஆணும் விவாகம் செய்துகொள்வார்களானால் அவர்கள் சகோதர உறவுமுறையில் வாழ்ந்துவருமட்டும் வாழ்க்கையானது இன்பமாகவே இருக்கும். அவர்கள் காம இச்சையின் மூலமோ, பிள்ளைப்பேற்றைக்கருதியோ தேகசம்பந்தம் வைத்துக்கொள்வார்களானால் அதில் இன்பம் ஜனிக்கப்போவதில்லை. அவர்களுக்குப்பிறக்கும் மக்களும் இயந்திர மனிதர்கள்போலவே இருப்பார்கள். இதே விதிதான் பெண் தன்மையுள்ள பெண்ணுக்குப், பெண் தன்மையுள்ள ஆணுக்கும் மணவாழ்வாக அமையும்.

ஆண் தன்மையுடைய பெண்ணுக்கு பெண் தன்மையுடைய ஆணும், பெண் தன்மையுடைய பெண்ணுக்கு ஆண் தன்மையுடைய ஆணும் மணமகனாக அமைந்துவிடுமாகில்

அவர்களுடைய பொருத்தமும், சந்தோஷமும்—இன்பமும் நேர்பாடாயிருக்கும். அவர்கள் ஒருவரை மற்றொருவர் ஒரு நொடி நேரமாவது மறவார்கள். அவர்களுக்கிடையில் வரும் எவ்விதப்பிணக்கிலும் பிரியார்கள். அதற்குத்தக்க பெண்ணும் புருஷனும் சேர்வது மாறுபாடாகில் அதற்குத்தகுந்தபடி இன்பமும், மகிழ்வும் மாறுபாடாகவே இருக்கும்.

பெண் தன்மை பொருந்திய பெண்ணானவள் பெண் தன்மைபொருந்திய ஆணிடம் சகோதரத்வமாக நின்று பேசுவதைக் காணலாம். அவர்களுக்குள் நாணமோ, வெட்கமோ கிடையாது. அவன் அவளிடம் கூசாமல் நடந்துகொள்வதோடு சகோதர உறவுமுறையில் கடிதப்போக்குவரத்துகளும், சந்திப்புகளும் ஏற்படுத்திக்கொள்வான். அதுபோலவே ஆண் தன்மையுள்ள பெண்ணும், பெண் தன்மை உள்ள ஆணும் லஜ்ஜையோ, காதல்—காம உணர்ச்சியோ இல்லாது இரு சகோதரர்கள்போல் பழகிக்கொள்ளக்காணலாம். புணர்ச்சியில் ஆண் பெண் இருவருள், ஒருவர் அநுபவிக்கும் சுகம் எத்தகைத்து என மற்றவர் அறியாது தனித்தனி பெறுவதாயினும் ஆண் அநுபவிப்பவனாகவும், பெண் அநுபவிக்கப்படுகிறவளாகவும் நடந்துகொள்வது வழக்கு. ஆனால் பெண் தன்மை உள்ள புருஷனும் அநுபவிக்கப்படுகிறவனாகவே நடந்துகொள்வான். இது பள்ளியறையின் இரகசியமாகும். அவ்வத்தன்மையுடைய மக்கள் தெரிந்திருக்கக் கூடும்.

இவ்வித தன்மைப் பொருத்தத்துடன் 18-வயதுக்கு மேற்பட்டபிறகுதான் பெண்கள் விவாகம் செய்துகொள்ள அவர்கள் 20-வயதுக்கு மேற்பட்ட மனமொத்த கணவனைத் தெரிந்தெடுத்துக்கொள்ளவேண்டும். இது வைத்தியசாஸ்திரத்திற்கும் ஒத்தது. இதற்குப் பெற்றோர்களும் சம்மதிக்க வேண்டும். ஒருவன் பல மனைவிகளைக்கொள்ளும் வழக்கம் ஒழியவேண்டும். பெண்கள் பல புருடர்களை மணந்துகொள்ளும் வழக்கம் தமிழர்களுக்குள் இல்லை. அது நம் பாக்யமேயாகும். பெண்களுக்குள்ள கட்டுப்பாட்டை ஆண்களுக்கும் ஏற்படுத்தவேண்டும். தாரமிருக்கத் தாரங்கொள்வது தகாதென்று சட்டம் செய்து செய்கையிலும் நிறைவேற்ற வேண்டும். இப்படியாக "மணப்பொருத்தம்" ஏற்பட்டால் மக்கள் மகிழ்வுடன் வாழ்வார்கள்.

# அகத்தியர் குணவாகடம் 3000.

(சாமி விருதை, சிவஞான யோகிகள்.)

(396-ம் பக்கத் தொடர்ச்சி)

## கிராணி.

பாரேநீ கிராணிவகை யாருக்கு மப்பா
　பக்குவமாயுண்டாகும் விதத்தைக் கேளாய்
வாரேநீ நாட்சென்ற சீதபே திக்கு
　உத்தமனே கிராணியென்று உறுதி சொல்லு
போரான பெருங்குடலுக்கும் மலக்குடலுக்கும்
　பெலமான வஹ்னிசிலேட்டும சவ்வுக்குந்தான்
காரேநீ கொதிப்பினால் இரணமுண்டாகி
　கண்டிப்பாய் இந்நோய்தான் பிறக்குங் காணே. (203)

காணடா மந்தக்குடல் சவ்வுக் குந்தான்
　கதிப்பான உஷ்ணந்தான் செல்லுமப்பா
வணடா வியாதிதான் அதிக மானால்
　உள்குடலில் துவாரமுண் டாகும் பாரு
பேணியே வப்போது சுரமுண்டாகும்
　பெலமான தேகந்தான் தளர்ச்சி காணும்
கோணடா பெருங்குடலின் இரணந்தா னப்போ
　பொங்கமுடன் சிறுகுடலிற் செல்லுந்தானே. (204)

தானாக உண்டாகும் விதத்தைக் கேளாய்
　தாணிதனிற் குளிர்ச்சியுடன் விடசந்துத் தானும்
தேனாக மிருதினி புசித்தலாலும்
　திரண்ட சனக் கூட்டத்தில் போவதாலும்

மானான சீதசுரங் காணும் போதும்
மகத்தான இந்தநோ யுண்டா மென்று
கோனான நூல்தனிலே பெரியோர் சொன்னார்
கொற்றவனே யதினுடைய குணத்தைக் கேளே (205)

கேளடா முதலில்தான் வயிற்றிலப்பா
குறிப்புடனே மந்தந்தான் உண்டாம் பாரு
வாளடா குடல் முறுக்கும் வேதனையுங் காட்டும்
வளமான மலபாதை யடிக்கடியே வுண்டாம்
தேளடா போனவுடன் வேதனைதான் தீரும்
தெளிவான வியாதிதான் பலமாகும் வேளை
பாளடா குடலில்தான் இரணமுண்டாகிப்
பண்பாக அடிக்கடிதான் பேதி போமே. (206)

பேதிதான் போனபின்பு இளைப்புண் டாகும்
பெலமான மலத்தில் ரதத்தஞ் சீதங்காணும்
ஆதியென்ற மலந்தானும் உண்டை கட்டி
அப்பனே தீய்ந்து அது புழுக்கை போலாம்
வாதையுடன் மலந்தானு மிறங்கு மப்பா
வன்மையுடன் கடுப்புடனே முக்கல் காணும்
வாதிபனம் அலைவதுபோல் பனது மெத்த
வன்மையுடன் வேதனைகள் படுவான் பாரே. (207)

பாரடா மலமதுதான் துர்க்கந்த மாகி
பண்பாகக் கருப்புடனே பச்சைநிறங் காட்டும்
ஊருகின்ற மூத்திரப்பை கொதிப்புக் கண்டு
உத்தமனே மூத்திரந்தான் செவந்து மெத்த
தேரோநீ யடிக்கடிதா னிறங்கும் பாரு
தெளிவாகச் சிலவேளை நீர்ச்சுருக்குக் காணும்
சீரான நாடியது தீவிரமாய்ச் சென்று
சிறுத்திருக்கும் நேர்மைதான் கண்டு கூறே. (208)



கூரான திரேகந்தான் சொரசொரப் போடு
கொதிப்புடனே உலர்ந்திருக்கும் குறியைப் பாரு
மாராகத் தாகந்தான் அதிகரிக்கும்
மகத்தான பசியுந்தான் ஒடுங்கிப் போகும்
தீராத வேளைக்குக் குறியைக் கேளாய்
திறமான மூச்சுந்தான் பிடித்த முண்டாம்
காரான துர்ப்பலந்தான் அதிகங் காணும்
கண்டிப்பாய் நாடியுந்தான் கெட்டுப் போமே. (209)

போமேதான் வயிற்றின்மேல் கையை வைத்தால்
பொங்கமுடன் இரணமாகி இருக்கு மப்பா
ஆமேதான் நாவுலர்ந்து சிவந்துமினு மினுப்புண்டாம்
அப்பனே நித்திரைதான் வாரா தய்யா
பாமேவும் மலமதுவும் நீராய்ப் போகும்
பக்குவமாய்த் துர்க்கந்தம் விக்கல் ஆயாசங் காணும்
பூமேவுந் திரேகந்தா னிளைப்புக் கண்டு
புவியைவிட்டு மரணந்தான் உண்டாங் காணே. (210)

உண்டாகும் பேதிதான் உக்கிரமாய்க் கண்டால்
உத்தமனே குடலுக்குள் துவாரங் கண்டு
நன்றான குடல்சவ்வுந் தாமிதமே காணும்
நலமான ஈரலில்தான் சிக்கட்டிக் கொள்ளும்
பண்டான இரணமுலர்ந்து குடற்சுருங்கி நாக்கில்
பளிச்சென்று மலபந்தம் உண்டா மப்பா
சிண்டான சிலேட்மச் சவ்வு அழுகிப் போனால்
சிறப்புடனே சுறப்புக்கண்டுஇறப்பான் காணே.(211)

காணுகின்ற ரோகந்தான் பழகி விட்டால்
கண்டிதமாய்ச் சீக்கிரத்தில் சிட்செய்தாலுந்தான்
பூணுகின்ற ரோகந்தான் வசப் படாது
பொல்லாத குடற்சவ்வு சுருங்கிப் போனால்

ஆணிபோ லதிருக்கும் கிரந்திநோய் கொல்லும்
அப்பனே திரேகந்தா னிளைத்துப் போகும்
சாணை திரேகந்தோ லுரிந்து போகும்
சதிராக ஒருகுணமாய் நில்லா தென்றே. (212)

நில்லாத ரோகந்தான் தீரவேண்டி
நீயறிய மருந்ததனை நிகழ்த்தக் கேளாய்
பொல்லாத பேதிமுதல் பெலவீ னங்கள்
புண்ணியனே தீரவென்றால் மருந்து கேளாய்
சொல்லாத அயந்தானுங் கொடுத்தா யானால்
சுருக்குடனே வியாதிதான் தீரும் பாரு
நில்லாத பேதிதான் நிற்க வென்றால்
நீ கொடுப்பாய்க் கபாடமதை நிசமாய்த் தானே (213)

### அதிசார நொண்டி.

அதிசாரம் வரலாறு தன்னைக் கேளாய்
அம்புவியில் மானிடர்க்கு அறைந்தேன் பாரு
மதியுடனே பெருந்தீனி புசிப்ப தாலும்
மகத்தான பக்குவமில் போசனத் தாலும்
சதிசெய்யும் அசுத்தசலங் குடிப்ப தாலும்
சண்டாளத் துர்நாற்றங் கொள்ள லாலும்
மதியில்லா இருதயத்தின் பயத்தி னாலும்
மயங்கிடுங் குளிருடலிற் படுவ தாலும் (214)

மதியதுதான் உஷ்ணத்தில் போவ தாலும்
மகத்தான இக்கா ரணத்தைக் கொண்டு
கெதியற்ற விடசுரந்தா லுற்பத்தி யாகிக்
கெடியாகச் சயமுதல் பற்றும் நோயால்
சதிசெய்யு மதிசாரங் காணு மென்று
சகத்திலுள்ள மானிடர்கள் அறிய வேண்டி
விதிமுனிதான் விரிவாகச் சொன்னா ரப்பா
விதங்கண்டு அப்போது குறியும் பாரே. (215)

# வைத்தியப்பகுதி.

## காமாலை.

இது மஞ்சக்காமாலை, பித்தக்காமாலை, ஊதுகாமாலை எனப்பலவகைப்படும். இவ்வியாதியுள்ளவர்களில் அநேகர் ஆரம்பத்தில் சிகிச்சை செய்துகொள்ளாமல் வருஷக்கணக்காக வளரவிட்டுவிட்டு பின்பு வியாதி மேற்கொண்டு சரீரத்திற்குத் தொந்தரவைக்கொடுக்கும் சமயத்தில்தான் கவனிக்கின்றனர். ஆரம்பத்தில் எளிதில் சிகிச்சைசெய்து போக்கக்கூடிய வியாதியை கவலையீனமாய் விட்டுவிட்டதின் காரணமாக எத்தனையோபேர்கள் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இவ்வியாதிக்கு நம் நாட்டு வைத்தியர்களில் எத்தனையோபேர் இந்த ஒரே வியாதிக்குச்சிகிச்சை செய்வதில் சாமர்த்தியம் வாய்ந்தவராயிருக்கின்றனர். அவர்கள்பால் அடுத்து சிகிச்சைசெய்யாது, கற்றுக்குட்டி வைத்தியர்களிடம் போவதால்தான் இவ்வியாதி கடினமானது என தப்பப்பிராயம்கொள்ளும் நிலைமையில் வந்துவிடுகிறது.

### வியாதியின் குணம்.

இவ்வியாதியஸ்தர்களின் கண், மூத்திரம், நகம், சருமம் முதலியவைகள் மஞ்சள் நிறமாய்க் காணப்படும். துணியில் பட்ட மூத்திரக்கரையும்கூட பசுமை நிறமாய் இருக்கும். மலமும் வெளுத்திருக்கும். சில சமயங்களில் தேகத்தில் நமைச்சல் எடுக்கும். களைப்பு, மயக்கம், தூக்கம், வாய்க்கசப்பு, வெறுப்புக் குணம், தாகம் இவைகளும் மெதுவுற்ற நாடி நடையும் உண்டாகும். "காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் நிறம்" என்பது உலக வழக்கு. இதற்கொப்ப அவன் பார்வைக்கு எல்லா வஸ்துக்களும் மஞ்சள் நிறமாகவே தோற்றும். சில வேளைகளில் கண்ணுக்குள்ளிருக்கிற நீர்களும் மஞ்சள் நிறமாகிவிடுவதும் உண்டு. நாளடைவில் ஆகாரம் குறைந்து வரவர தேகமெலிவும் உண்டாகும். கண் பார்வையும் சிறிது மங்கும்.

### வியாதியின் காரணம்.

பித்த நீரானது குடலில் வந்து விழாமல் இரத்தத்தில் சேர்வதாலும், ஈரலின் தொழில் கெட்டு பித்த நீரைச் சுரப்

பிக்காமல் போவதால் பித்தம் வெளிப்படாமல் போவதாலும் இவ்வியாதி உண்டாகிறது; மேலும் பித்தத்தில் கல் உண்டாகி அது பித்தக்குழலில் வந்து அடைத்துக்கொண்டு பித்தம் குடலில் விழாமல் செய்வதாலும இவ்வியாதி உண்டாகிறது. பித்த நீரானது இறுகி, பித்தக்கல் உண்டாகிறதென்றும் சொல்லப்படுகிறது. உட்கார்ந்துகொண்டே தொழில் செய்பவர்களுக்கு அநேகமாய் இந்த பித்தம் இறுகுமென்றும் சில அனுபவசாலிகள் கருதுகின்றனர். தவிர மலபந்தத்தால் குடல் நிறைந்து பித்தக்குழலை அமுக்கிக் கொள்வதாலும் இவ்வியாதி உண்டாகிறது. கடைசியில் இதுவே பித்த பாண்டாக மாறுவதுமுண்டு.

## சிகிச்சை.

இவ்வியாதி உண்டான காரணத்தை அறிந்து சிகிச்சை செய்யவேண்டும். பித்த நீர் சுரக்காமல் காமாலை வியாதி பிறந்ததென்று தெரிந்தால் அதற்கு கரிசலாங்கண்ணி, சாம்பிராணிப் பதங்கம் முதலியவைகள் கொடுக்கலாம். பித்த நீர் தடைப்பட்டு இவ்வியாதி வந்ததென்று தெரிந்தால் பக்கத்துக்கு போஸ்தக்காய் போட்டுக் காய்ச்சின வெந்நீர் ஒற்றிடம்கொடுத்து அத்தடையை நீக்க வழியையும் தடை நீங்குகிற வரையில் பித்த நீர் சுரக்காமல் இருக்கும்படியான வகையையும் தேடவேண்டியது. பித்தக்கல் அடைத்துக்கொண்டு அதனால் உண்டானதாகத் தெரிந்தால் அதை வெளிப்படுத்தக்கூடிய சிகிச்சையைச்செய்யவேண்டும். கீழாநெல்லி அல்லது தம்பட்டை அவரை இலை இவைகளில் ஒன்றைக்கசக்கிச் சாறுபிழிந்து வேளைக்கு 1-அவுன்ஸாக வீசம்படி தயிரில் கலந்து கொடுக்கவும். முதலில் உப்புப் பேதிக்குக் கொடுத்துக்கொண்டு மருந்து கொடுக்கவேண்டும்.

## மருந்து.

பிஞ்சுக் கத்திரிக்காயைக் குடைந்து அதில் சுண்டக்காய்ப்பிரமாணம் பெருங்காயத்தைச் செலுத்தி அந்த கத்திரிக்காயை மூடி நெருப்பிலிட்டு தோல் கருக்கும்படி சுட்டு அதை எடுத்து தோலை உரித்து ஆறவைத்து அப்படியே சாப்பிடக்கொடுக்கலாம். 3-வேளையில் குணம் தெரியும். இது அநுபவம்.

# மருந்து செய்பகுதி.

## மேகநிவாரண எண்ணெய்.

கற்றாழைவேர், கஸ்தூரி மஞ்சள், குமட்டிக்காய் வகைக்கு பலம் ஒன்று எடுத்து அரைத்து கால்படி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி பதத்தில் வடித்து வைத்துக்கொள்ளவும்.

அளவு:— வேளைக்கு ஒரு அவுன்ஸ் விதம் காலையில் மட்டும் கொடுக்கவும்.

உபயோகம்:— வெடிப்பு, வீக்கம், கிரந்தி, பத்து, சூலை முதலியன குணமாகும்.

பத்தியம்:— புளி நீக்கவும்.

## பித்த எரிவுக்கு.

வேப்பம்பூ, சுக்கு, மிளகு, பூண்டு சமனெடை எடுத்து தேன் விட்டு அரைத்து சுண்டக்காய்ப் பிரமாணம் 6 வேளை கொடுக்க குணமாகும். பத்தியமில்லை.

## வாய்வுக்கு உப்பு.

கரியுப்பு, இந்துப்பு, வளையலுப்பு, சவுட்டுப்பு, கல்லுப்பு, வெண்காரம் சரியெடை எடுத்து பிரண்டைச்சாறு விட்டரைத்து ஒரு மண் கலயத்தில் போட்டு, சில்லிட்டு, சீலைமண் செய்து 20 எருவில் புடமிடவும். மறுபடி எடுத்து குப்பைமேனிச் சாற்றிலரைத்து ஒரு புடமும், பூவரசம் பட்டைச் சாற்றிலரைத்து ஒரு புடமுமிட்டு எடுத்து பவுடர் செய்து வைத்துக்கொள்ளவும்.

அளவு:— வேளைக்கு அரைக்கால் ரூபாயெடை வீதம் காலை மாலையாக நாள் ஒன்றுக்கு 2 வேளை வீதம் மோரில் அல்லது நீச்சத்தண்ணீரில் கொடுக்கவும்.

உபயோகம்:— அஜீரணம், குலை எரிவு, வயிற்றுவலி, வாய்வு முதலியன நீங்கும். பத்தியமில்லை.

# வேதவியாசர் முதற்காண்டம்.

(400-ம் பக்கத்தொடர்ச்சி.)

## பிள்ளையுண்டாக விழி எண்ணெய்.

கேளப்பா ஏரண்டத் தெண்ணெய் கேளு
    கெடியாக பிள்ளையுண்டாம் வாயுதீரும்
மீளவே படியிரண்டா மேரண்டத் தெண்ணெய்
    விதமாகத் தாழியொன்றில் விட்டுக்கொண்டு
தாளாத நிலவாகை யமுக்கிரா வேர்
    சார்வான கள்ளியின் வேர் சிவதைரோகணி
கோளான மொசுக்கைகையான் முள்கொழுஞ்சி
    கொடுப்பை யிலைவகையொன்று பலமுந்தானே. (6)

வாங்குவாய் திரிபலைவேர் கொடி முருங்கை
    வாய்த்த குமட்டிக்காய் குமட்டிவேரும்
ஓங்கு சாரணை பிரண்டை குறிஞ்சாவேரு
    முயர்பெரிய சிறுதும்பை பலமொவ்வொன்றில்
தாங்கியே யிருகுருணி நீரிற் போட்டு
    சதைத்திட்டே அடுப்பேற்றிக் காய்ச்சிப்
பாங்காய் வடித்திருத்தே எட்டொன்றாக்கி
    பரிவாக எண்ணை தனித்தனியே கலந்துகொள்ளே (7)

கொள்ளுவாய் திரிகடுகு கடுக்காய் மஞ்சள்
    குலமான பெருங்காயம் குப்பை ஓமம்
விள்ளுவே கடுகுறவா அக்கிராகாரம்
    மிகுந்த பரியரிந்து வாய்விளங்கம்
விள்ளாதே நற்காயம் விடயந் தேக்கு
    வெப்பாலை செவியமுடன் கடுகுரோகணி
தள்ளாதே நிலவாகை வசம்பு உள்ளி
    தாசர்பிண்டு வகை கழஞ்சு ஒன்றே. (8)





ஒன்றாகக் குமட்டிப்பழத்தின் சாற்றால்
    உரைத்திடித்துச் சூரணித்துச் சாற்றாலாட்டி
சென்றடும் பொரிக்காரம் வெண்காரந்தான்
    சிறப்பாகக் கழஞ்சுயிடைதான் கூடச்சேர்த்து
நன்றாக அரைத்தெடுத்துக் கள்ளிப்பாலும்
    நாலுகுடம் விட்டதன்மேல் நன்றாகக்கிண்டி
கொண்டிடவே அடுப்பேற்றி எரித்துக்கொண்டு
    குணமாக மெழுகுபதந் தன்னைப்பாரே. (9)

பாரப்பா மெழுகுபதந்தனில் வடித்து
    பாங்காகப் பூசைசெய்து வைத்துக்கொண்டு
பாரப்பா மாதவிடாய் மூன்றுநாளும்
    பரிவாகக் காசிடைதான் உண்ணச்சொல்லு
பாரப்பா கவுசிமகோதரம் நீராம்பல் பருத்த
    தொரு பெருவயறு திரட்சைஎட்டு
பாரப்பா குன்மமொடு சுரவைபீலி
    பற்றருக்கும் கிருமியொடு புழுக்கள் விழும். (10)

(தொடரும்)

(N. B.) ஏட்டுப் பிரதியிலுள்ளதை அவ்வாறே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

---

### அர்ப்பணம்.

தமிழ்நாட்டுப் படமுதலாளிகளுக்கு இது அர்ப்பணம்.

படம்:— (ஹிந்தி) "பாக்யசக்ரா"

கம்பெனி:— கல்கத்தா நியூதியேட்டர்ஸ் பிலிம்கம்பெனி

செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 80000. வரவு 3 மாதத்தில் முதல் போக மூன்று லட்சம் ரூபாய் (லாபம்.)

பம்பாய் மினர்வா டாக்கீசில் 21 வாரங்கள் காட்டப்பட்டது. போலீஸ் பாராவுடன் 263000 ஜனங்கள் பார்த்திருக்கிறார்கள். அந்த தியேட்டருக்கு 106281 ரூபாய் வசூலாயிருக்கிறது.

தமிழ்நாட்டாரோ சாமுண்டீஸ்வரி, விநாயகர் கதை, பட்டினத்தார், மாணிக்கவாசகர், அப்பர் போன்ற கதைகளை சிருஷ்டித்துக்கொண்டிருக்கிறார்களாம்.

# சினிமாப் பகுதி.

மிஸ். கமலம்.

தமிழ்நாட்டில் நடைபெறும் சினிமாக்களெல்லாம் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டுத்தயாரிக்கப்பட்டிருக்கின்றன. பிரமாதமாக விளம்பரங்களும் செய்யப்படுகின்றன. சில படங்களுக்கு நல்ல வருமானமும் கிடைக்கிறது. ஆனால் விரல் விட்டெண்ணக்கூடிய ஒரு சிலதுதவிர மற்றப்படங்கள் தயாரிக்கப்பட்டதின் நோக்கம், கொள்கை (பணம் சம்பாதிப்பது என்பது ஒன்றைத்தவிர) ஏதாகிலும் எந்தப்பட முதலாளிக்கேனுமுண்டா? இதற்குப்பதில் நான் சொல்லத் தயாரில்லை. சினிமா பிரியர்கள்-சினிமா ரசிகர்கள்—சினிமாப் பித்தர்கள்—பொது ஜனங்களாகிய இவர்களே பதிலளிக்கும்படி விட்டுவிடுகிறேன். ஆங்கில படங்கள், ஹிந்தி படங்கள், சில தெலுங்கு படங்கள் ஆகிய இவையெல்லாம் பாஷை விளங்காத தமிழ்நாட்டில் செல்வாக்கும், கவர்ச்சியும் பெற்றிருப்பானேன்? படாடோபமும், டாம்பீகமும் இல்லாத காட்சிகள், ஜம்கி, பாசி, பவளம், முத்து இவை இல்லாத உடைகள், நடனம், நாட்டியம் முதலிய பொருத்தமற்ற-கதைக்குச் சம்பந்தமில்லாத ஆபாசங்களும், நிர்வாண நேத்திரானந்தங்களும் இல்லாத அம்சங்கள், மந்தைமந்தையாய் நடிகர்களற்ற ஹிந்தி, தெலுங்கு படங்கள் தமிழ்நாட்டில் எவ்வளவுநாள், எநதெந்த ஊர்களில் நடைபெற்றன? எத்தனைபேர் அதைப்பார்த்தார்கள்? பாஷை தெரியாத சர்வ சாமானிய கிராமாந்திர மக்கள்கூட கதையை முழுதும் பார்த்துப் பின் வாய்விட்டு "நல்ல கதை; ஆனால் பாஷைதான் தெரியவில்லை" என்று சொல்லியதை எத்தனை படமுதலாளிகள் கேட்டிருக்கின்றனர். இவை ஒருபுறமிருக்க கண்ணைக்கவரும் ஆடைகள், விலையுயர்ந்த அணிகள், கம்பீரமான காட்சிகள்-ரசிக்கத்தக்க சங்கீத ஞானமுள்ள-நாடக உலகில் புகழ்பெற்ற நடிகர்கள் ஆகிய இவைகளெல்லாம் ஒருங்கே அமைந்திருக்கும் தமிழ்நாட்டுப் படங்கள் கேட்பாரற்று-ரசிப்பாரற்று-புகழ்வாரற்று ஒரு தடவை பார்ப்பதே கஷ்டமாய் இருப்பதின் காரணமென்ன?





1. அத்தனையும் புராணப்படங்கள்.
2. இயற்கைக்கு ஒத்ததாயில்லை.
3. தினசரி வாழ்க்கையை சித்தரித்துக் காட்டுவதாய் இல்லை.
4. காலப்போக்கை அனுசரித்ததாயில்லை.
5. எவ்வித நீதியையோ, நெறியையோ போதிக்கும் அம்சம் கொண்டதாயில்லை.
6. மனமாற்றத்தை உண்டாக்கத்தக்க உணர்ச்சியுள்ள நடிப்பில்லை.
7. உணர்ச்சிக்கும் நடிப்புக்கும் எவ்வித ஐக்கியமும் இல்லை.
8. காதல், அன்பு, கோபம் முதலிய உணர்ச்சித் தோற்றங்களை கஷ்டப்பட்டு, செயற்கையில் உண்டாக்க வேண்டியிருக்கிறது.
9. பெருமைக்காக பாஷை தெரியாத அயல் நாட்டு டைரக்டர்கள் அமர்த்தப்படுகிறார்கள்.

தந்தை மகனை நியாயவிரோதமாக, அற்பகாரணத்துக்காக மந்திரியின் துர்ப்போதனையின்மேல் தேசப்பிரஷ்டம் செய்துவிடுகிறான். எதிர்பாராவிதமாய், திடீரென தன் மைந்தன்மூலம் இதைக்கேட்ட தாய் பாடல் ரூபமாக தன் துயரத்தைத் தெரிவிக்க சுமார் 10 நிமிஷம் செலவழிக்கிறாள். ஆ! இது எவ்வளவு அசம்பாவிதம்? நிரபராதியான தன் மைந்தன்மீது இவ்வளவு கடுமையான தண்டனை விதிக்கப்பட்டதைக்கேட்ட ஒரு தாய் இயற்கையில் எவ்வளவு சோகமுறுவாள்? தாளம் விடாமல், அடி குறையாமல் பாட அவ்வளவு அவகாசம் ஏற்குமா? பல நாள் பிறிந்திருந்த மனைவி, உயிரிழந்த தன் தனயனை மயானத்தில் தகனம் செய்கையில் இறந்தவன் தன் மைந்தனேயென அறிந்த தந்தையின் மனோ உணர்ச்சி அந்த இடத்தில் எவ்வாறிருக்கும்? அந்த கட்டத்தை, நடிப்பால் பொது ஜனங்களை அப்படியே வசீகரித்துவிடலாமன்றோ! ராஜா வி. எம். கோவிந்தசாமி பிள்ளை M. R. கோவிந்தசாமி பிள்ளை, பைரவிசுந்தரம்பிள்ளை இவர்களின் நடிப்பு என்றும் நம் கண்முன் நிற்பானேன்? ஆனால் அரிச்சந்திராவில் என்ன நடக்கிறது? பார்ப்பவர் கண்களை

மூடிக்கொள்ள வேண்டியதுதான். அரிச்சந்திரன் அந்த கட்டத்தில் சாவதானமாக-தன் மனைவியைச் சுற்றிவந்து-மைந்தன் அருகில் உட்கார்ந்து-அவனை எடுத்து மடிமீது வைத்துப்பின்பிரலாபிக்கஆரம்பிக்கிறான். என்னஉணர்ச்சி-என்ன நேர்மை! என்ன நடிப்பு! அன்பர்களே சிந்தியுங்கள். தமிழ் படங்களில் இதுபோன்ற சம்பவங்களுக்கும், இயற்கைக்குப் புறம்பான நடிப்புகளுக்கும் 1000 உதாரணங்கள் கூறலாம். இந்த அசம்பாவிதம் சினிமா உலகைவிட்டு இனி அறவே அகலவேண்டும்,

## வருங்கால உலகில்

கீர்த்திபெற வேண்டுமென்று எண்ணுகிற நடிகர்கள், கதாபாத்திரங்கள் கேவலம் பணத்திற்காக மட்டும் நடிப்பதாக எண்ணாமல் தாங்களே கதைக்குக் காரணகர்த்தர்கள் என்ற உணர்ச்சியுடன் நடிக்கவேண்டும். அப்படி நடிக்க இயலாதவர்களை பயிற்சிகாலங்களில் டைரக்டர்கள் தக்கவாறு பயிற்றுவிக்கவேண்டும். சமயத்திற்கேற்றவாறு முகபாவங்களை (Facial Expressions) மாற்றிக்காட்டப் பழக்கவேண்டும். உணர்ச்சியைத் தெள்ளிதில் விளக்குவது முகபாவமும், கண்களுமே. மனித சுபாவமே எப்போதும் ஒரே தகைமைத்தல்ல. உணர்ச்சிக்கேற்றவாறு தினசரி வாழ்க்கையில் முகபாவமும் மாறுபடுவதை நாம் கண்கூடாகக்கண்டுவருகிறோம். ஆனால் அதையே நடித்துக்காட்டும்போது அதை அப்படியே சித்தரித்துக் காட்டவேண்டியது அவசியம் எனபதைமட்டும் ஏனோஎல்லோரும் துரதிஷ்டவசமாக, மறந்தேவருகிறார்கள்.

கோபம் ஆத்திரம், வீரம், அகங்காரம், சலிப்பு, விருப்பு, வெறுப்பு, காதல், சோகம், சிந்தனை, எதிர்ப்பு, பொறுமை, துவேஷம், திருப்தி, அதிருப்தி, சோர்வு முதலிய சகல அம்சங்களையும் பேச்சின் மூலமாக விளக்குவதைவிட, உணர்ச்சி மட்டுமிருந்தால்—கதையே தான்; தானே கதை என்ற மனோ உணர்ச்சியுடன் நடிப்பார்களாயின் அந்தகையோர் பொதுஜனங்களின் அன்பிற்குரியராவார்கள். கதை எவ்வளவு மோசமாயிருப்பினும் உணர்ச்சியுடன்நடிக்கப்படில் நடிகர்கள் அதனால் புகழடைவர்.. கதையும் பெருமை அடையும் என்பதை ஒவ்வொரு நடிகரும் மனதில்வைக்கவேண்டும்.

# நாடகப் பகுதி.

## நாகானந்தன்.

(லேட் H. ராமசாமி அய்யர் அவர்களால் எழுதப்பட்டது)

(405-ம் பக்கத் தொடர்ச்சி)

(முத்துமாலை பிரவேசம்)

குழந்தாய் முத்துமாலா! நான் கேட்கும் வினாக்களுக்கு உண்மையே பகருவதாய்ப் பிரமாணம்செய்.

முத்துமாலை:— பிரபோ! தேவியாணை மெய்யல்லாது பொய் பகரேன்.

சத்தியகீர்த்தி:— குழந்தாய்! இன்று சுகுணசுந்தரியாரும் நீங்களும் உத்தியானவனம் சென்றிருந்தீர்களா?

முத்துமாலை:— பிரபோ! ஆம்; சென்றிருந்தோம்.

சத்தியகீர்த்தி;— சுந்திரகுமாரர் உங்களுடன் வந்திருந்தாரா?

முத்துமாலை— அவர் வரவில்லை.

சத்தியகீர்த்தி:— நீங்கள் இன்று உத்தியானவனத்தில் என்ன செய்தீர்கள்?

முத்துமாலை:— நாங்கள் இன்று உத்தியானவனத்தில் ஒன்றுமே செய்யவில்லை. சந்திரகாந்த மேடை சென்று தேக அசௌக்கியமாயுள்ள இளவரசியாருக்கு சைத்தியோபசாரங்கள் செய்துகொண்டிருந்தோம்.

சத்தியகீர்த்தி:— சேனாதிபதி நாகானந்தர் பூஞ்சோலை வந்தது உங்களுக்குத் தெரியுமோ?

முத்துமாலை:— ஆம்; தெரியும்.

சத்தியகீர்த்தி:— அது எப்படித் தெரியும்?

முத்துமாலை:— நாங்கள் மூவரும் பேசிக்கொண்டிருக்கும் சமயம் கட்டியிருந்த கருங்குரங்கு கட்டவிழ்த்துக்

கொண்டு எங்கள் முன் வந்தது. விளையாட்டாய் அன்று மதயானையினின்றும் காத்தது போலின்றும் சுகுணசுந்தரியை இக்குரங்கினின்றும் காத்தற்பொருட்டு நாகானந்தரே வரக்கூடாதா என்றோம். அவர் ஓர் புதரினின்றும் வந்து கருங்குரங்கைப் பிடித்து அதன் ஸ்தானத்தில் கட்டினார். அதனால் அவர் வரவு தெரியும்.

சத்தியகீர்த்தி:— நாகானந்தர் ஓர் செடி மறைவிலிருந்து உங்கள் சம்பாஷணை முற்றிலும் கேட்டிருப்பின் உங்கள் மனம் எவ்வாறிருக்கும்?

முத்துமாலை:— அப்படியிருப்பின் எல்லாருக்கும் திருப்தியாகவே இருக்கும்.

சத்தியகீர்த்தி:— சந்திரகுமாரர் மறைவிடம் இருந்து மாற்றமுற்றும் கேட்டிருப்பின் எப்படி இருக்கும்?

முத்துமாலை:— முதலில் அது அவருக்கு சகிக்கொணா துக்கத்தை ஆக்கும். எங்களுக்கும் மனவருத்தத்தினைக் கொடுக்கும்.

சத்தியகீர்த்தி:— அப்படியாயின் அச்சம்பாஷணை நாகானந்தரைப்பற்றியதா? குழந்தாய்!

முத்துமாலை:- பிரபோ! அது இளவரசியாரின் இரகசிய மாற்றம். அதனைச்சொல்ல என்னால் தகாது.

சத்தியகீர்த்தி:— உங்கள் வார்த்தைகளை எல்லாம் நாகானந்தரும் சந்திரகுமாரரும் உற்றுக் கேட்டிருப்பார்களாயின் என்னவிதமாகும்?

முத்துமாலை:— தெய்வந்தான் அவ்வாறு சம்பவித்திராது தடுத்திருத்தல் வேண்டும். வேறுவிதமாயிருப்பின் நாகானந்தருக்குக் கேடுவிளையும் சந்திரகுமாரனால்.

சத்தியகீர்த்தி:— உங்கள் மூவர் சம்பாஷணை நாகானந்தருக்கும், சுகுணசுந்தரியாருக்கும் ஏற்பட்டுள்ளதான காதலைப்பற்றியதோ?

முத்துமாலை:— ஆம்; பிரபோ. என்னால் இதுவிஷயமாய் இதற்குமேல் ஒன்றுமே சொல்லக்கூடாது. கிருபைபுரிந்து பின்னும் இதுவிஷயமாய் கேள்விகள் கேட்காதிருக்க வேண்டும்.

சத்தியகீர்த்தி:— குழந்தாய்! உன்னை விசாரித்து முடிந்தது. உன் இருப்பிடம் செல்லலாம். இராஜமார்த்தாண்டா!



மோகனமாலைதன் சாக்ஷி அவஸ்யமில்லை என்பது எனது அபிப்ராயம். தங்கள் யுக்தமெப்படியோ?

சுகுணன்:— அமாத்தியரே யானும் அவ்விதமே எண்ணுகின்றேன். மோகனமாலைதன் விசாரணை வேண்டாம.

சத்தியகீர்த்தி:— சேனாதிபதியாரே! தாங்கள் உத்தியானம் புகுந்தது வரகுணவழுதியார் விடைபெற்று அன்றிப் பெறாதா?

நாகானந்தன்:— பிரபோ! அனுமதி பெற்றேயாம்.

சத்தியகீர்த்தி:— தாங்கள் உயிர்மீட்பித்த மானினைக் காணும் அவாவுடன் அங்குற்றது வாஸ்தவந்தானோ?

நாகானந்தன்:— ஆம்; பிரபோ! அது உண்மையே.

சத்தியகீர்த்தி:— நாகானந்தரே! ஆடவர் நுழையா உத்தியானம் வந்து மானினைக்காண விவேகியான தங்கள் மனத்துள் எப்படி எழுந்தது?

நாகானந்தன்:— விவேகமெனும் வாள்கொண்டு சேதித்தும் அவ்வாசையினும் களைத்ததுகண்டு எவ்விதமும்காண்பதெனத் தீர்மானம் கொண்டேன். கலவேலியாய்த் தடையிலாது வரவேற்புஏற்பட்டது. அதுபற்றி உள்நுழைந்தேன்

சத்தியகீர்த்தி:— சுகுணசுந்தரியார் முன் தோற்றுதல் கூடாதென வரகுணர் உத்திரவிருந்தும் அவர்முன் போகத் துணிந்ததேனோ?

நாகானந்தன்:— கருங்குரங்கினின்றும் அவர்களைக்காத்தற்பொருட்டேயாம்.

சத்தியகீர்த்தி:— தற்செயலாய் அங்கு வந்தீரா? அன்றி மறைவிடமிருந்து அவர்கள் சம்பாஷணை கேட்டு வந்தீரா?

நாகானந்தன்:— தாங்கள் பிற்கூறியவாறேயாகும்.

சத்தியகீர்த்தி:— கன்னியர் உலாவும் பூஞ்சோலை வர ஆசைகொண்டதன்றி அவர்கள் வார்த்தைகளை மறைந்திருந்து கேட்டது பெருந்தவறன்றோ?

நாகானந்தன்:— ஆசையின் முன் தவறும், வெட்கக்கேடும் தோற்றுதல் இயற்கையே. என்செய்வது?

சத்தியகீர்த்தி:— உண்மையில் தாங்கள் மான் பார்க்க வந்ததாய்த் தோற்றவில்லையே?

நாகானந்தன்:— இருதடவைகளிலும் கூறிய மான் என்னும் மொழிக்கு மிருகமான் என்பது பொருளன்று.

சத்தியகீர்த்தி:— அப்படியாயின் வரகுணரை வஞ்சித்தன்றோ உட்புகுந்தவராகின்றீர்கள்.

நாகானந்தன்:— நான் மறைபொருளாய் மறை என்றேன். அவர் குறிப்பறிந்தே அனுமதி தந்தார் என்பதை அவர் முகமுரைத்தது.

சத்தியகீர்த்தி:— அவ்வாறின்றிக் குறிப்பறியாமலும், தேக அசௌக்கிய காரணத்தால் சுகுணசுந்தரியார் உத்தியானம் வரார் என்ற எண்ணத்தாலும் தமக்கு மானினைக் காண விடைதந்திருந்து, தாங்கள் தவறி நடந்தமை காரணமாய் தங்களை சிறையாக்கக் கருதி முயல்கையில் தாங்கள் சினந்து அவரைக் கோரல்செய்திருத்தல் கூடாதா?

நாகானந்தன்:— சுகுணசுந்தரியார் வாரார் என்பது அவரது எண்ணமாயின், அவர் முன் தோற்றுதே எனக் கட்டளை பிறப்பிக்கக் காரணமும் உளதோ? ஆதலின் அவர் வந்துளதறிந்தும் நான் அவர்தமைக்காண விழைந்தது தெரிந்துமே விடைதந்தார், ஆதலின் அவர் என்னைச் சினக்கவாவது நான் அவரைக் கொல்லவாவது காரணமில்லையே.

சத்தியகீர்த்தி:— தங்கள் கையிலன்றோ ரத்தம் வடியும் கம்பிருந்தது. தம்மடியிலன்றோ அவர் வீழ்ந்து மாண்டுகிடந்தார். தங்களையன்றோ சுந்திர குமாரர் இறுகப்பற்றியிருந்தார் அப்படியிருக்கத் தங்களை எப்படி அக்கொலை செய்யாதார் எனக்கொள்வது?

நாகானந்தன்:— வரகுணவழுதியாரைத் தாக்கி ஓடியது சுந்திரகுமாரரே. அவர்தம் தலையில் ஓங்கி அடித்ததும் சுந்திரகுமாரரே. அவர் வீழ்ந்து இறந்ததும், சுந்திர குமாரர் காலின் கீழேயே நான் ஓடிப்பற்றினேன் கம்பினை. அதனைவிட்டு என்னைத் தழுவிப்பிடித்தனர். அதுபற்றியே அவ்வித தோற்றத்திற்குக் காரணம்.

சத்தியகீர்த்தி:— அவரை ஏன் திமிறி ஓடியிருத்தல் கூடாது?

நாகானந்தன்:— நான் கம்பினைப்பிடுங்கி அவர்தன்னால் வெட்டப்பட்டதாலும், மறுபடி திமிறி ஓடுவதாலும் வினையும்



பயிர் ஒன் றே என மனதிற்பட்டது. என் விதியை எண்ணி நடப்பது நடக்கட்டும் என எண்ணி இருந்துவிட்டேன். அது காரணத்தாலேயே ஒன்றும் பேசாததும் ஒன்றும் செய்யாததும்.

சத்தியகீர்த்தி:— சுந்திரகுமாரர் வரகுணவழுதியாரைக் கொல்லக் காரணமில்லையே.

நாகானந்தன்:— மூவர் வாய்மொழி என்போன்று மறைந்திருந்து கேட்டிருத்தல் வேண்டும். என்மீது பொறாமை கொண்டிருத்தல் வேண்டும். என்னை அவர்தம் வழியினின்றும் விலக்க எண்ணியிருத்தல் வேண்டும். என்னுடன் எதிர்க்க ஆற்றலில்லாமையையுணர்ந்து பேடியருக்கேற்றவழியில் என்னைத்துலைக்க அவரைக் கொன்றிருத்தல் வேண்டும்.

சத்தியகீர்த்தி:— அவரைக் கொல்வதால் நீர் எப்படித் துலைக்கப்படுவீர்?

நாகானந்தன்:— அவர் வனம் வந்ததற்கும் சாக்ஷியில்லை. வார்த்தைகள் கேட்டதற்கும் சாக்ஷிகளில்லை. வரகுணரையும் சாக்ஷிகளில்லாமலே கொன்றிடின், அப்பழி என்னையல்லாது வேறு யாரையும் சாடாதென்பது கருதியே அவர் செய்த காரியம். தெய்வம் பின்னும் அவருக்கனுகூலமாய் என்னை அங்கனுப்பி நான் கம்பினை வாங்கவும் அவர் என்னைச் சேர்த்துப்பிடிக்கவும் ஆக்கியது. இதனால் எல்லாருக்கும் யானே குற்றவாளி என்பது தோற்றம். பிரபு வரகுணர் சாகாதிருப்பின் எல்லாம் வெட்டவெளியாய் இருக்கும். என்னூழ் அவர் அவ்விதம் மாண்டது. என்செய்வது?

சத்தியகீர்த்தி:— மன்னர் மன்ன! விசாரணை முடிந்தது; ஆக்ஞையை எதிர்பார்க்கிறேன்.

சுகுணன்:— அமாத்தியர்காள்! நீங்கள் பலரும் சத்தியகீர்த்தியார்நடத்திய விசாரணையை செவிசாற்றினீர்கள். தங்களுள் சத்தியவிரதர் நாகானந்தர் சார்பாகவும், ஜயசீலர் சுந்திரகுமாரர் சார்பாகவும் விஷயங்களை எடுத்து வாதிக்கட்டும். பின்னர் நாம் எல்லவரும் ஆய்ந்து ஓய்ந்து குற்றவாளி இன்னானெனத் தீர்மானிப்போம்.

சத்தியவிரதன்:— இராஜாதிராஜ சுகுணபாண்டி மன்னருக்கும் மற்றுமுள்ள அங்கத்தினருக்கும் வந்தனம்தந்து எடுத்து வாதிப்பதாவது:—

நாகானந்தர் சின்னஞ்சிறு வயதுமுதலே மானைக்கட்டி மானைப்பிடித்தலென்னு மியல்பினையொத்து மானிடத்திருமேனியாய், சுந்திரானந்த நாமாவாய் அழகர் சோலையுள் எழுந்தருளிய சிவஸ்வரூபமாம் தேசிகமூர்த்தியால் வளர்க்கப்பட்டனர். பிரம்ரூட நியாயத்தையொத்து குருவெப்படி சிஷ்யன் அப்படியென ஆனவர். கொல்லாமை, கொன்றுதின்னாமை, குடியாமையாதி பாபகாரியங்களில்லாதவர். தயை, தாக்ஷண்யம், ஜீவகாருண்யமாதி நற்குணக்குன்றம், குலநலம் மறைபட்டிருப்பினும் உத்தம க்ஷத்திரிய தர்மமும், கர்மமும் பூரணமே உபதேசிக்கப்பெற்றவர். ராஜபூபதிபால் கடமை கடவாமையை நன்கே விளக்கியவர். பொருள் மோகமின்மையைத் துலக்கியவர். போராற்றலுண்மையைக்காட்டியவர். அதுபற்றி சேனைபகமாய் உயர்த்தப்பெற்றவர். அழகே திரண்டுருவான சுகுணசுந்தரியார் மெய்க்காதலில் ஈடுபட்டவர். அதுபற்றி வரகுணவழுதியார் விடைபெற்று உத்தியானம் வந்தவர். இளவரசியார் மாற்றமுற்றும் செவியேற்றவர். சுந்திரகுமாரர் அவருக்கெனவரித்துள மாதரசியார் காதலை இவர் பெற்றதுகண்டு பொறாமையெனும் பேய்வசப்பட்டு தர்மாதர்ம விவேசனமிழந்து சிறியபாட்டனார் என்பதையும் கருதாது அக்கொலையை இவர்மேல் சாட்டும் கெட்ட எண்ணத்துடனேயே அதனைப்புரிந்தார். ஆதலின் நாகானந்தர் குற்றவாளியல்லஎன்பது என துணிபு. சுந்திரகுமாரனன்றியாவரேனும் இவரே கொலைசெய்ததாய்க்கூறியதுண்டோ? சுந்திரகுமாரர் அவர்தம் பெருமைக்குத்தடையாயுதித்த இவர்மீது தானியற்றிய குற்றம் சுமத்துவதும், இவரை இடையூறாகாது தடுக்க முயல்வதும் இயல்பேயாகும். ஆகலின் நாகானந்தர் குற்றவாளியல்ல.

ஜயசீலர்:— பாண்டிய நாட்டார் போற்றியேற்றும் நம் இறைவருக்கும் அவரது அங்கத்தினர்க்கும் வந்தனந்தந்து வாதிப்பதாவது:—

சுந்திரகுமாரர் பாண்டியர்வழி வந்தவர். நன்கேகற்றுத் தேர்ந்தவர். நாட்டிற்கு நாயகமாவதற்குரியவர். மனுநீதி முற்றுங்கற்றவர். சின்னஞ்சிறு வயதுமுதலே தவறொன்றும் இயற்றியறியாதவர். பந்துமித்திரர்களுடன் அத்தியந்த பக்ஷமுள்ளவர். குலநலமிலா நாகானந்தர்மீது சுகுணசுந்தரியார் காதல் பற்றினும் பெற்றோர் மற்றோர் அவ்விவாகத்தின



இணங்கார் என்பது தெரிந்தவர். இன்று அவர்கள் மாற்றங்கேட்காதவர். அன்னியரும் ஆடவன் பூஞ்சோலைவந்த காரணம் உணர வரகுணரை நாடித்தேடியவர். நாகானந்தரோ பொய்மொழியாடி விருத்தரை ஏமாற்றி உட்புகுந்ததன்றி அவர் சுகுணசுந்தரியார் வரின் அவர்முன் தோற்றொணாதெனக்கட்டளை பெற்றும், இளவரசியார் இருப்பிடம் தேடி அடைந்து, மறைவிடமிருந்து மாற்றமுற்றுங்கேட்டு, விளையாட்டாய் இவர்தனைத் தோழியர்கூவ கன்னியர்முன் நாணிலாது வந்தவர். வந்ததுகண்ட வரகுணவழுதியார் குற்றங்கருதி சிறையாக்க முயல அவர்தனைக் கம்பேந்திக் கொன்றனர் நாகானந்தர். அவர்தனைத் தாவிப்பிடித்துக் கொலைஞனெனக்கூவி வனபரிபாலகர்பால் விடுத்தனர் சுந்திரகுமாரர். பிடித்திருந்த நிலையையும் இரத்தம் சொட்டிய தன்மையையுங்கண்டு உரைத்தனர் வனபரிபாலகர். ஆதலின் நாகானந்தரே கொலைஞர். மிக்குப்பெருகி மிகு புனல் பாய்ந்தாலும் கடலின் உப்பு ஒழியுமோ? ஒழியாது. அதுபோன்று நல்லோரிணக்கமும், நற்பதவியும் வாய்த்தும், குலநலமிலாக் காரணத்தால் குற்றம் புரிந்தனர் நாகானந்தர்.

சுகுணன்:— அங்கத்தினர்காள்! நியாயவாதம் செவியேற்றேன். முடிவு இன்று உரைப்பதாய் என் எண்ணமில்லை. இன்றைக்கு எட்டாம்நாள் முடிவு கூறுவேன். அதுபரியந்தம் நாகானந்தன்மீதும், சுந்திரகுமாரன் மீதும் பாரா வைத்துள்ளேன். அவர்கள் தங்கள் சுயகிரகங்கள் வாழலாம். அவரவர் கட்டேற்பட்ட தொழில்கள் புரியலாம்; எங்கும் உலாவலாம்; நகர் கடந்து அயலிடம் போகொணாது. போயின் தண்டனைக்குள்ளாவர். இவர்கள் போக்கினை கவனிக்கவே வைத்துளேன் காவலாளர்.

(இத்துடன் சபை கலைந்தது. எல்லோரும் மறைந்தனர்)

(தொடரும்)

## சந்தாநேயர்களுக்கு

சித்தனுக்கு கடிதம் எழுதும் அன்பர்கள் தயவுசெய்து தங்கள் சந்தா நம்பரை தவறாமல் எழுதவேண்டும். நம்பர் குறிக்கப்படாத கடிதங்கள் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர், "சித்தன்" பழனி.

# மதிப்புரைகள்.

## "தமிழ் மலர்"

மேற்கண்ட மாதப்பத்திரிகையின் பிரதி ஒன்று வர பெற்றோம். இதில் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள், ஹாஸ யக்கதைகள், தொடர் நாவல், சினிமா விமர்சனம் முதலிய நிறைந்து காணப்படுகிறது.

வருட சந்தா ரூ. 1—0—0.

தமிழ்மலர் ஆபீஸ், 2972, ரெயில்வேரோடு, தஞ்சாவூர்.

## "லோகமான்யா"

ரங்கூனின்றும் வெளிவரும் மேற்கண்ட வாரப்பதிப் ஒன்று வரப்பெற்றோம். இதில் உலகச்செய்திகள், சி கதைகள், கட்டுரைகள், செய்தித்திரட்டு முதலியன மிளிர்ந் காணப்படுகின்றன.

வருட சந்தா ரூ. 4—0—0.

லோகமான்யா, 241-37-ம் தெரு, ரங்கூன்.

## "வித்தல்பாய் படேல்"

கே. சி. சுந்தரம் அவர்களால் எழுதப்பட்டு, படே நிலையத்தாரால் பிரசுரிக்கப்பட்ட மேற்கண்ட பெயருள் புத்தகம் ஒன்று வரப்பெற்றோம். இந்திய சட்டசபைத் தலை வராய் அமர்ந்து, தனக்கு ஒப்பாரும் மிக்காருமிலா ஆண்மை யுடன் நடந்து, வீரப்பட்டம் பெற்ற வீரர்பட்டேலின் ஜீவி சரிதமும் தேசிய ஆர்வமும், தேச சேவையும் வரையப்பட டுள்ளது. புஸ்தகம் சிறிய சைசில் 16 பக்கங்களுடன் உ ளது. விலை 6 பை தான். பட்டேல் நிலையத்தார் இ போன்ற அநேக பிரசுரங்கள் குறைந்த விலையில் வெளியி வார்களானால் அது நாட்டிற்கு பேருபகாரமாக இருக்கும்.

**கே. சி. சுந்தரம், ஜர்னலிஸ்ட், 59, டி.பி. கோவில் வீதி,**
**திருவல்லிக்கேணி, சென்னை**


## லிலிபாக்ஸ் காமிரா.

**ரூ. 2—12—0.**



ஜெர்மனி லென்ஸ் பொருத்தப்பட்டது. பழக்கமில்லாதவர்களும் கூட கார்டு சயிஸ் அளவில் நொடிப்பொழுதில் போட்டோ எடுக்கலாம். வேலையற்றுத்தவிப்போர் தின சரி 5-ரூ க்கு குறையாமல்சம்பாதிக்கலாம். உபயோகிக்கும் விதம் சுருக்கம். கையாளு வதற்குவேண்டிய பிளேட், கார்டு, மருந்துகள் இனும். விலை ரூ. 2—12—0. உயர்ந்த ரகம் ரூ. 3—12—0.

பாக்கிங் தபால் சிலவு பிரத்தியேகம்.

எல்லாவித காமிராக்களும் எங்களிடம் கிடைக்கும்.

விலாசம்:- **EASTERN TRADING COY,**
*Post Box No. 12204:- Hatkhola, CALCUTTA.*

# "சுதந்திரன்".

## சிறந்த தேசியப் பத்திரிகை.

பர்மா இந்தியர் முன்னேற்றங்கருதி
சிறந்த முறையில் பாடுபடும்

சிறந்த தேசியப் பத்திரிகை.

பல அறிஞர்களின் கட்டுரைகளுடனும், சிசிய விளக் கங்களுடன் பிரதி வாரம் வெள்ளியன்றுமிளிர்கின்றது பர்மா பத்திரிகை உலகில், பல்லாயிரக்கணக்கான அபிமானிகளின் ஆதரவினைப் பெற்றிலங்குகின்றது.

| | | | |
|---|---|---|---|
| வெளிநாடு | வருட சந்தா | ரூ. | 7—0—0. |
| | 6-மாதம் | ,, | 4—0—0. |
| உள்நாடு | வருட சந்தா | ,, | 5—0—0. |
| | 6-மாதம் | ,, | 2-12—0. |

மானேஜர், சுதந்தரன்,
337 — 37வது வீதி, இரங்கோன்.

எட்டாவது

# திராவிட வைத்திய சம்மேளனம்,

கூத்தாநல்லூர்.

(கோரடாச்சேரி ரயில்வே ஸ்டேஷன் மார்க்கம்)

அன்புள்ள ஐயா,

நிகழும் 1936ம்-வருஷம் செப்டம்பர்-மீ 20, 21-வ ஞாயிறு, திங்கள் இவ்விரு தினங்களிலும் தஞ்சை ஜில்லாவைச்சேர்ந்த கூத்தாநல்லூரில் 'சாந்தி மன்றம்' என்ற மாடிக் கட்டிடத்தில் மேற்படி சம்மேளனம் சென்னை ஆயுர்வேதாசார்யா **Dr. N.** மாதவமேனன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

மேலைத்தஞ்சை, ஜில்லா போர்டு பிரசிடெண்டு, மகா-ள-ள-ஸ்ரீ **A. P. L. N. V.** நாடிமுத்து பிள்ளை **M. L. C.** அவர்கள் மகாநாட்டைத் திறந்துவைப்பார்கள். தங்களின் நல்வரவு அன்புடன் எதிர்பார்க்கப்படுகிறது.

தங்கள்

வி. சுப்பிரமணியம், **S. E. S.** முகம்மது இஸ்மாயில்சாகிப்,
பிரதான காரியதரிசி. வரவேற்பு சங்கத்தலைவர்,

குறிப்பு:—

1. மகாநாட்டுடன் மூலிகை, மருந்து கண் காக்ஷியும், நாடிப்பரிக்ஷைப் போட்டியும் நடைபெறும்.

2. திராவிட வைத்திய அங்கத்தினர்கள் தயவு செய்து மகாநாடு கூடுமுன்னரே தங்கள் தங்கள் பிரதிநிதிக்கட்டணமாகிய ரூ. 3-ம் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளுமாறு கோரப்படுகிறது.

# வைத்திய உலகில் புதுமை!

மேனாட்டு வைத்திய ஆராய்ச்சி நிபுணர்களால் சகல வியாதிகளுக்கும் இஞ்செக்ஷன் மூலம் சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது. மேனாட்டு வைத்தியர்களிலும், நம் நாட்டு வைத்தியர்களிலும் சிலர் நாடிப்பரீக்ஷை அறியாத நிலையில் வைத்தியம் செய்து வருகிறார்கள். கீழ்க்கண்ட ஓர் நூதன செய்தி அவர்களுக்கு மகிழ்ச்சியளிக்குமென்பதோடு அவர்கள் வேலையையும் சுளுவாக்குமென்பதைக் காணலாம்.

வான் டி மேல் என்ற ஓர் பெல்ஜிய நிபுணர் சென்ற 25-வருஷங்களாய் ஆராய்ச்சிசெய்து பல கஷ்ட நஷ்டங்கட்குப்பின்னர் ஒரு ரேடியோ பிலிம் எடுக்கும் இயந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறார். இதுவரை எக்ஸ்ரே போட்டோ முறை மட்டும் வழக்கத்திலிருந்துவருகிறது. இம்முறையால் உடம்பிலுள்ள பல கருவிகளின் நிலையை அப்படியே படம் பிடிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இப்பெரியார் எக்ஸ்ரே முறையையும், பிலிம் முறையையும் சேர்த்து படம் பிடிக்கப்படும் வகையில் இந்த ரேடியோ பிலிம் முறையை கண்டுபிடித்திருக்கிறார். அவ்விதம் எடுக்கும்போது உள்ளிருக்கும் கருவிகளும் அவைகளின் சலனமும் ஓடும் படம்போல் படம் பிடிக்கப்படுகிறதாம்.

இந்த நவீன ஆராய்ச்சி இயந்திர உதவியால் மனிதனது வியாதியை நிர்ணயிக்க முடியுமாதலால் இதிலிருந்து வைத்தியம் செய்வது மிக சுலபம். நோய் தீர, தக்க மருந்தை நிஷ்கரிப்பதுதான் வைத்தியர்கள் வேலையாகும்.

# தேவை.

"சித்தன்" பத்திரிகை விற்பனை செய்யவும், சந்தாதாரர்கள் சேர்க்கவும், முக்கிய நகரங்களுக்கு பொறுப்பும், செல்வாக்குமுள்ள ஏஜண்டுகள் தேவை. தக்க கமிஷன்கொடுக்கப்படும். ஒரு அணா ஸ்டாம்புடன்விண்ணப்பித்துக்கொள்ளவும். மானேஜர், "சித்தன்" பழனி.

## ரூ. 2-12-0-க்கு
## கீழ்கண்ட இனாம் சாமான்களுடன்




**மூன்று கடிகாரங்கள், 3-89 வினோத வெகுமதிகள்.**

எட்டு ஒட்டோதில்குஷ் பாட்டல் தருவிப்பவர்களுக்கு கோல்டு கில்ட் டய்ம் ரிஸ்ட் வாட்ச் 1, ரயில்வே டயம் பேபீ கடியாரம் 1, பீ டயம் பீஸ் 1, (NB ஐந்து வருஷம் க்யாரண்டி.) 14-க்யாரட் தங்கநிப் பவுண்டன் பேனா 1. முத்து நிக்லஸ் மாலை 1, ரோல்டுகோல்டு மோதிரம் 1. (NB தங்கள் பெயர் செதுக்கி அனுப்பப்படும்.) 100-கெஜதூரம் வெளிச்சம் கொடுக்கும். டார்ச் லைட் 1, பேபருமாலு 1, சீப்பு 1, முகம்பார்க்கும் கண்ணாடி 1, ரூபாய் 1—12—0 அனுப்பவும்.

பாக்கிங் போஸ்டேஜ் சார்ஜ் ரூ 0—14—0 பிரத்தியேகம்.

**Dutta & Co., 15/1, Joymittar St.**
(SDN) **Hatkhola Po. Calcutta.**

---

நீங்கள் இதைப்படித்ததுண்டா?

மனச்சாந்தியும், அன்பும், ஒழுக்கமும் அடைய விரும்பும் ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய புஸ்தகம்

மார்க்க அரேலியர்

## ஆத்மசிந்தனை.

**பிரதி 1-க்கு விலை அணா 8.**

**கிடைக்குமிடம்:-**

**மானேஜர், சித்தன் பழனி. S. I.**

---

# பீமவிலாசம்,

அடிவாரம், பழனி.

**எங்கள் கிளப்பில்,**

தனி நெய்யில் சுத்தமாய் தினசரி பக்ஷணங்கள் தயாரிக்கப்படுகின்றன. முதல்தரமான சாப்பாடும், சிற்றுண்டியும், நகர பிரமுகர்களின் அபிமானம் பெற்றது. ஸ்ரீ பழனியாண்டவர் மலைக்குப் போகும் வழியில் அடிவாரத்திலுள்ளது. அயலூர் வாசிகளுக்கு அமாவாசை, கிருத்திகை, சஷ்டி தினங்களில் சௌகரியம். ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.

**P. S.** வெங்கடேஸ்வர அய்யர்,
புரோப்ரைட்டர்.

---

சி. எம். சாமி

# ஆரோக்கிய லேகியம்

இதைச்சாப்பிட்டு வந்தால் பலஹீனம், அஜீர்ணம், தேக மெலிவு, வெட்டை, உஷ்ண காங்கை, மூலச்சூடு, மேக விபாதிகள், பித்த அரோசிகம், வாய்வு, புளித்தேப்பம், இடுப்பு வலி, காமாலை, மலக்கட்டு முதலியன நீங்கி, நல்ல பசியைக் கொடுத்து, இரத்த விருத்தி, தேகக்கட்டு, தாதுபுஷ்டி இவைகளைத் தரும். பத்தியம் இல்லை. சாப்பிட வெகு ருசியாயும் மணமாயுமிருக்கும். அன்றாடகம் சரியாய் மலப்பிரவர்த்தி செய்வதில் முதன்மையானது. நீண்டகாலம் அநுபவமானது. கர்ப்பிணிகளும் இதைச்சாப்பிட்டு வருவதால் நல்ல திடகாத்திரம் அடைவார்கள்.

½-சேர் புட்டி 1-க்கு விலை ரூ. 2—0—0.

**மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி. S. I.**

# "தமிழ் மலர்".

ஓர் இனிய தமிழ் மாதப் பத்திரிகை.

நவரசம் பொருந்திய, பல சிறந்த மேதாவிகளால், பற்பல கட்டுரைகள் எழுதப்பெற்று தமிழ் மணம் கமழும்படி வெளிவருகிறது.

உள் நாடு வருட சந்தா ரூ. 1—0—0.
வெளிநாடு வருட சந்தா ரூ. 1—8—0.
விளம்பர விகிதங்களுக்கு
நேரே எழுதித் தெரிந்துகொள்ளவும்.
மாதிரிப் பிரதி இனாம்.

மானேஜர், "தமிழ் மலர்" ஆபீஸ், தஞ்சாவூர்.

# "கிராம ஊழியன்"

(மாதம் இருமுறை வெளிவரும்)

இந்திய விவசாயிகளின் முன்னேற்றம் ஒன்றையே பெரு நோக்கமாகக்கொண்டு கடல் கடந்த இந்தியர்களின் அபிவிருத்தியை நாடி உழைப்பது. சாதி சமய பேதங்களை வெருட்டி சமதர்ம ஒற்றுமையை நாட்ட முற்படுவது. பொதுஜன ஸ்தாபனங்களில் ஏற்படும் சீர்கேடுகளை அரசன், ஆண்டி என்ற வித்தியாசமின்றி, அச்சமற்றகண்டனங்களாலும், ஆணித்தரமான பதில்களாலும், தயை தாக்ஷண்யம் இன்றி நிர்தாக்ஷண்யமாய் எடுத்துக்காட்டி சீர்திருத்த முயல்வது. கிராமப் புனருத்தாரணத் திற்காகவே தோன்றியது.

ஆயிரக்கணக்கான கிராமங்களில் உலவிவருவது. விளம்பரக்காரர்களுக்குத் தக்க ஊதியம் அளிப்பது.

வேண்டுவோர் எழுதுக.

வருட சந்தா. உள் நாடு ரூ. 2. வெளிநாடு ரூ. 3.

மானேஜர், கிராம ஊழியன் ஆபீஸ்,
உறையூர், திருச்சி ஜில்லா.

# "சுசீலா"

## சுகந்த வாசனைத் தைலம்.

நூதன முறைப்படி தயாரிக்கப்பட்டது.

ரோமம் உதிர்தல், தலையில் பொடுகு உண்டாகுதல் முதலியவைகளை நீக்கி கூந்தலை வளரச்செய்யும்.

புட்டி 1-க்கு விலை அணா 10.

கிடைக்குமிடங்கள்:-
உடுமலை K.S. ராமநாத அய்யர் ஹோட்டல், பழனி.
சென்ட்ரல் லஞ்ச் ஹோம், பழனி.
பீம விலாஸ், அடிவாரம், பழனி.

*Read:—*

# "BOYS' MAGAZINE".

**Over 50,000 Readers.**

**Annual Subscription Re. 1 Only.**

PALAMKOTTAH. S. I.

## 'லக்ஷ்மி'

### ஓர் நவீன மாதப் பத்திரிகை.

ஆராய்ச்சிக் கட்டுரைகள், இனிய கதைகள், ஹாஸ்யம், விகடம், செய்தித்துணுக்குகள் முதலியன நிறைந்தது. எளிய செந்தமிழ். அழகிய அட்டையுடன் கூடியது. அதிகப் பக்கம், குறைந்த சந்தா. ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெறவேண்டியது.

சந்தா உள்நாடு ரூ. 1—0—0. வெளிநாடு 1—8—0.

விபரங்கட்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர், "லக்ஷ்மி" ஆ ஸீஸ், திருநெல்வேலி ஜங்ஷன்.

## பரதானந்த ஸாதக அலங்காரம்.

ஆசிரியர்: பண்டித C. முனுசாமி பிள்ளை

ஒவ்வொருவரும் வெகு ஆவலுடன் எதிர்பார்த்திருந்தது எல்லோராலும் எளிதில் உணர்ந்துகொள்ளக்கூடியது.

தாளங்கள் தெரியவில்லையே என்னும் கவலை இனி வேண்டாம். 5-ஜாதிகளிலும் கதிபேதங்களுடன் விளக்கப்பட்டுள்ளது.

இப்புத்தகம் பக்கவாத்தியங்களுக்கென்றே தனியாக 35-தாளங்களும் பஞ்சஜாதி நடைகளுடன் தாம் விபரங்களுடன் கணக்கிட்டு வெளியிடப்பட்டுள்ளது. பக்கவாத்தியங்களான மிருதங்கம், தவுல், கஞ்சிரா, கடம் ஆகிய ஒன்றைப் பயின்றுகொள்ள விருப்பமுடையவர்களும், சிறிது கற்றுக்கொண்டவர்களும், தாள சம்பந்தமாகத் தெரிந்துகொள்ள அவர்கள் படும் கஷ்டங்களும், பணச் செலவும் கொஞ்சமல்ல. இப்பெருங்குறை இப்புத்தகத்தால் நீங்கிவிடும். கீர்த்தனை, ஸ்வரம், பாடும் வித்வான்களுடன் இனி பயமின்றி வாசிக்கலாம். சமம், $\frac{1}{4}$, $\frac{1}{2}$, $\frac{3}{4}$, இடங்களில் சந்தேகமின்றி தவறாமல் நீங்கள் இனி வாசிக்கமுடியும்.

இப்புத்தகம் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வெகு உபயோகமானது. இன்றைக்கே ஒரு புத்தகத்திற்கு எழுதுங்கள்.

**இப்புத்தகம் 1-க்கு விலை ரூ. 1—10—0.**

தபால் செலவு வேறு.

**கிடைக்குமிடம்:- மலையப்பசாமி வைத்தியசாலை,**

**பிராஞ்சு:— 1-54, அருணாசல நாயக்கன் தெரு,**

**சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.**

## 'லோகோபகாரி'

### பழமையும், புதுமையும் கொண்ட வாரப்பத்திரிகை.

42-ம் ஆண்டு நடக்கிறது.

இனிய கதைகள், தேசீய பாடல்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், உலக அதிசயங்கள் முதலியன கொண்டு இனிய எளிய செந்தமிழில் எழுதப்பட்ட செய்தித் துணுக்குகள் பொதிந்து வெளிவருகின்றன.

இன்றே சந்தாதாரராய்ச் சேருங்கள்.

வருட சந்தா ரூ. 4—0—0.

"லோகோபகாரி"

சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.

## 'அறிவு'

### (ஓர் அறிவியல் மாத வெளியீடு)

பாட்டுகள், படங்கள், கதைகள், விஞ்ஞான ஆராய்ச்சிகள் முதலிய பல அரியவிஷயங்கள்நிறைந்தது.

வருட சந்தா { உள் நாடு ரூ. 1-0-0.
வெளி நாடு ரூ. 1-8-0.

மானேஜர், "அறிவு"

சாத்தன்குளம், திருநெல்வேலி.

## 'செங்குந்த மித்திரன்'

### (ஓர் உயரிய மாதாந்த வெளியீடு)

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், அரசியல் அனுபவக் குறிப்புகள், உலக விநோதங்கள், விகடத் துணுக்குகள், சிறு கதைகள் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா:- { உள்நாடு ரூ. 1—8—0.
வெளிநாடு ரூ. 2—0—0.

**செங்குந்த மித்திரன் ஆபீவ்,**

138. பவளக்காரத்தெரு, சென்னை.

தேவை! ஏஜண்டுகள் தேவை!!

## ‘ஜகன் மோகினி’

மாதாந்த நாவல் சஞ்சிகை.

13-வது ஆண்டு நடக்கிறது. ஜீவிய சந்தா ரூ. 25.
வருஷ சந்தா ரூ. 1—8—0. தனிப்பிரதி அணா 2.

ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனாம்! இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப்படும் எல்லா நாவல்களும் இனாமாக அளிக்கப்படும்.

ஜெகன்மோகினி ஆபீஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை.

---

ஞானமுள்ள பெற்றோர்
தம் மக்களுக்குத் தேடும் சிறந்த ஆஸ்தி

## சிறுவர் அறிவுக்கதிர்.

இரண்டாம் ஆண்டு.

பாலர் முதல் பெரியோர் வரை வாசித்து ஆனந்தம் அடையும் மாதப்பத்திரிகை. சிறுவர்கள் அறிவு விருத்திக்குத் தமிழ் நாட்டில் உலாவும் முதல் பத்திரிகை. கல்வித்துறையில் சிறந்த அநுபவம் உடையவர்கள் கட்டுரையைக்கொண்டது. மாதிரிக்காப்பிக்கு ஐந்து காலணா ஸ்டாம்பு அனுப்பவும்.

வருட சந்தா உள்நாடு 12 அணா. வெளிநாடு 1—4—0.

டிபாசிட் கட்டும் ஏஜண்டுகள் தேவை.

விலாசம்:— சிறுவர் அறிவுக்கதிர் ஆபீஸ்,
ஈரோடு. (தென்னிந்தியா.)

---

## புது உலகம்.

ஓர் நவீன ஆராய்ச்சி சஞ்சிகை.

பல அறிஞர்களுடைய கட்டுரைகள், உலக நிகழ்ச்சிகள், தத்துவஞான, விஞ்ஞான பொருளாதாரக் குறிப்புகளும் கொண்டது.

சந்தா உள் நாடு ரூ. 1—8—0 வெளிநாடு 2-வெள்ளி.

“புது உலகம்” ஆபீஸ், தங்கசாலைவீதி, சென்னை.

---

## ‘ஸ்பாரதி’

தமிழ் மாதப் பத்திரிகை.

தனிப்பிரதி காலணா.

எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை.

ஸ்பாரதி ஆபீஸ்,
72, பாலேஸ் ரோட், மதுரை.

---

## “வம்பன்”

கதைகளும், விகடங்களும் நிரம்பிப் படங்களுடன் கூடிய செந்தமிழ் மாத வெளியீடு.

பாலர்முதல் விருத்தர்வரை ஆண் பெண் யாவரும் விரும்பும் கட்டுரைகள் பல செறிந்து விளங்கிப் படிப்போர்களை என்றும் மகிழச்செய்யும்.

ஆசிரியர்:— த. இராமநாதம் பிள்ளை.

தனிப் பிரதி அணா 2.

உள்நாடு வருட சந்தா ரூ. 1–4–0.
மலாய்நாடு ௸ ரூ. 2–0–0.

வம்பன் ஆபீஸ், 304 வால்டாக்ஸ் ரோடு,
பி. டி. மதராஸ்.

---

## ‘நவீனம்’

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை

ஆராய்ச்சி கட்டுரைகள், முதுமொழிகள், சினிமா விமர்சனம், சம்பாஷணை முதலியன கொண்டு நாவல் தொடர் கதைகளாக வெளிவரும் ஓர் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை.

சந்தா உள்நாடு ரூ. 1–0–0. வெளிநாடு ரூ. 1–8–0.

“நவீனம் ஆபீஸ்”
வேப்பேரி, மதராஸ்.

189933

அச்சமற்ற கண்டனம்! —

— ஆணித்தரமான அபிப்பிராயம்!!

[illegible] ர் வேற்றுமையற்றது, பாரதநாட்டின்

தொழில், [illegible] அபிவிருத்திக்கு உழைப்பது,

—— தொழி[illegible]ளர் நலன் நாடுவது ——

## "விஸ்வ பந்து"

பத்திரிகையே.

ஆசிரியர்:— [illegible]. ம. நடராஜன் அவர்கள்.

இதனை ஆதரிப்பது உங்கள் கடமையல்லவா?

வருட சந்தா

உள்நாடு ரூ. 3—0—0. வெளிநாடு ரூ. 5—0—0.

தனிப்பிரதி அணா 0—1—0.

காரியஸ்தர், விஸ்வபந்து, காரைக்குடி.

வியாபாரத்திற்கழகு — விளம்பரம் செய்தல்

## 'வர்த்தகமணி'

வர்த்தகசம்மந்தமான விஷயங்களை அடிப்படையாய்க் கொண்டு, நவீன இலக்கியம், காவல், சிறுகதை, ராஜீயம், புராதன சரித்திரசம்பந்தமான விஷயங்களுடன் வெளிவரும்

மாத வெளியீடு.

விளம்பரத்திற்குப் பிரதானமானது.

வியாபாரம் செழிப்படைய தொண்டாற்றுவதில் எப்பத்திரிகைக்கும் முன்னணியிலிருப்பது.

வருடசந்தா மதுரைக்கு ரூ. 0—4—0.

" இந்தியாவிற்கு ரூ. 0—6—0.

" வெளிநாட்டிற்கு 0—12—0.

தனிப்பிரதி 0—0—3. வெளிநாட்டிற்கு 0—0—6.

மானேஜர், "வர்த்தகமணி" ஆபீஸ்,

[illegible] வீதி, மதுரை.

# பெண்களுக்கு

ஏற்படும்

சூதகசம்பந்தமான
சகல வியாதிகளுக்கும்
நிகரற்றது.

க
ற்
ப

# கற்பஎண்ணை

ண்
ணை

பரிக்ஷிக்கத் தக்கது!

உத்தரவாத முள்ளது!

ஆயிரக்கணக்கான
கைக்கும் முன்னணியிலிருப்பவை
இதை உபயோகித்து
குணமடைந்
துளர்.

ஹெட் ஆபீஸ்:-
மலையப்பசாமி
வைத்திய[illegible] பழனி.

பிராஞ்சு:— 1-54,
அருணாசலநாயக்கன் தெரு,
சித்திரைப்பேட்டை, மதுரை.